Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :90 மாசி 15ஆம் நாள் வியாழக்கிழமை 27 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பலாலியில் பதுக்கிய கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 27
பலாலி தம்பானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கடற்படையினரும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து நடத்திய தேடுதலில் 22 கிலோ கேரளாக் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது. 25 >

## மஹிந்தவே மீண்டும் பிரதமர்

### மஹிந்தானந்த சொல்கின்றார்

கொழும்பு, பெப். 27
'நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசமைப்பதாக ஐக்கிய 25 >

## இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 27
'போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ராஜபக்ஷக்கள் பொறுப்புக்கூறுதலை முன்நகர்த்துவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. 04 >

## தேர்தலுக்கு நிதியில்லை

கொழும்பு, பெப்.27
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதியைப் பெறுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய 25 >

### முச்சந்தி முரளி




ஒரு லட்சம் வேலைவாய்ப்பு

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 26,066 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 27
அரசின் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் 26 ஆயிரத்து 66 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.
குறைந்த வருமானம் பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பை வழங்குவ 04 >



## பணிஸ் விலை: 5 ரூபா குறைப்பு

யாழ், பெப். 27
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு முதல் அனைத்து வகை பணிஸ்களின் விலைகளும் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பணிஸ் வகை 04 >

# தீர்மானத்திலிருந்து விலகியது இலங்கை!

### ஐ.நா கூட்டத்தொடரில் அரசு அறிவிப்பு

**கொழும்பு, பெப்ரவரி 27**
**இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30/1 மற்றும் 40/1 ஆகிய தீர்மானங்கள் நாட்டின் அரசமைப்புக்கு விரோதமானவை. எனவே, இந்தத் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகுகின்றது.** 04 >




## நோயாளிகளிடம் மோசடி: 'அபேஸ்' பேர்வழி சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் கிளினிக் சிகிச்சைக்குச் வருவதுபோன்ற போலிச் சான்றிதழ்களுடன் காத்திருந்து, நோயாளிகளின் நகைகள், பணம் என்பவற்றை அபேஸ் செய்துவந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார்.
யாழ்ப்பணம் திருநகர்ப் பகுதியில் வசிக்கும் 29 வயதான இளைஞரே இவ்வாறு பிடிக்கப் பட்டார். 04 >

## ஏப். 25 - மே 4 க்கு இடையில் தேர்தல்

### திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் என்கிறார் மஹிந்த

கொழும்பு, பெப். 27
'எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கும் மே மாதம் 4ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும் இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான 04 >

## த.தே. கூட்டமைப்பில் ரஞ்சனுக்கு வேட்புமனு

### அவரே பரபரப்புத் தகவல்

கொழும்பு, பெப். 27
'பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு சஜித் தலைமையிலான கூட்டணி வேட்புமனு வழங்காவிட்டால், தாம் வழங்குவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்குத் தெரிவித்துள்ளனர் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் 25 >

## இராணுவப் பிரசன்னம்: காரணம் கூட்டமைப்பா?

### மறுதலிக்கிறார் சுன்னாகம் பிரதேசசபைத் தவிசாளர் தர்சன்

யாழ்ப்பாணம், பெப். 27
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் செயற்படும் நிலையில், எமது பேச் 04 >

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ 54,000/-
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
011 200 88 88
செலான் வங்கி

# சின்னம் தொடர்பில் மிக விரைவில் தீர்வு

## மார்ச் 2இல் புரிந்துணர்வு கைச்சாத்து

கொழும்பு, பெப். 27

நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச் மாதம் 2ஆம் திகதி கைச்சாத்திடப்படும் என்று அதன் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'இலங்கைக்கு முதலிடம்' என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கூட்டணி செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். சின்னம் தொடர்பான இறுதித் தீர்வு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாகரிகமான அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு இன்று உரிமைக்காகப் போராடும் மக்கள் மத்தியில் எவ்வாறான நாகரிகத்தைப் பின்பற்று கின்றது என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அரசின் இரு தலைவர்களும் (ஜனாதிபதியும் பிரதமரும்) அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என்பது கேள்விக்குறியதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி ஜனநாயகத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கும். தேசிய பொருளாதாரம், தேசியப் பாதுகாப்பு மற்றும் தேசிய நல்லிணக்கம் ஆகிய மூன்று பிரதான அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டுள்ளன. ஒன்றுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து பிறிதொன்றைத் துறக்க முடியாது. ஆனால், இன்று இந்த மூன்று அம்சங்களும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன' - என்றார். (ம-22)




## உதயனை பார்வையிட்ட முன்பள்ளிச் சிறுவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

வட்டுக்கோட்டை மற்றும் சங்கரத்தை ஆகிய இடங்களைச் சேர்ந்த முன் பள்ளிச் சிறார்கள் 88 பேர் நேற்று உதயன் பணிமனைக்கு வருகை தந்தனர்.

சங்கரத்தை முன்பள்ளி மற்றும் வட்டுக்கோட்டை கஜமுகன் முன்பள்ளி சேர்ந்த மாணவர்களே உதயன் பணிமனைக்கு வந்தனர்.

சிறார்களுடன் அவர்களின் பெற்றோர்களும், முன்பள்ளி ஆசிரியர்களும் வருகை தந்தனர். அவர்கள் உதயன் பணிமனையைப் பார்வையிட்டதுடன், பத்திரிகை தொடர்பான விவரங்களையும் கேட்டறிந்து கொண்டனர். (எ)

## மன்னாரில் இன்று வெப்பம் அதிகம்!

மன்னார், பெப். 27

நாட்டின் சில பிரதேசங்களில் இன்று வெப்பம் அதிகரித்துக் காணப்படுமென வானிலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மன்னார், காலி, மாத்தளை மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும். எனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச மக்கள் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் சந்தர்ப்பங்களில் போதுமானளவு நீரை அருந்துமாறும் இள நிற ஆடைகளை அணிந்து வெளியே செல்லுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றுள்ளது. (ம)



## பொதுத் தேர்தலுக்காக சஜித்துடன் சங்கமித்த முற்போக்குக் கூட்டணி

கொழும்பு, பெப். 27

நாடாளுமன்றத் தேர்தலுக்காக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எனும் புதிய அரசியல் கூட்டணியில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று உத்தியோகபூர்வமாக இணைந்தது.

இதற்காக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதன் பொதுச்செயலாளர் ரஞ்ஜித் மத்தும பண்டார, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், உப தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இரா தாகிருஷ்ணன் மற்றும் உறுப்பினர்களான எம். வேலுகுமார், ம. திலகராஜா, அ. அரவிந்த குமார் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி எனும் புதிய அரசியல் கூட்டணியில் இணையும் பங்காளிக் கட்சிகளை கட்டங்கட்டமாக இணைப்பதற்கு சஜித் தீர்மானித்துள்ளார். இதன்படி நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமய தனது முடிவை அறிவித்து புதிய கூட்டணியில் சங்கமித்திருந்தது. அந்தவகையில் நேற்று தமிழ் முற்போக்குக் கூட்டணி இணைந்துள்ளது. (ம-22)

## சஜித்தின் அழைப்பு மைத்திரி நிராகரிப்பு

கொழும்பு, பெப். 27

ஐக்கிய தேசிய சக்தியுடன் இணையுமாறு அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவால் விடுக்கப்பட்ட அழைப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று நிராகரித்துள்ளது.

கொழும்பிலுள்ள சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, சஜித்தின் அழைப்பை ஏற்கமுடியாது என கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறினார்.

'கட்சியை மீட்டெடுப்பதற்காகவும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் தம்முடன் இணையுமாறு சுதந்திர கட்சிக்கு சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார். இதனை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இனி கூட்டுப் பயணம் கிடையாது என்பதில் மைத்திரிபால சிறிசேனவும் உறுதியாக இருக்கின்றார். ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அரசாங்கம் அமைத்ததாலேயே சுதந்திரக்கட்சிக்கு வரலாறுகாணாத பின்னடைவு ஏற்பட்டது. அன்று இழைத்த வரலாற்றுத் தவறை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

எனவே, மீண்டுமொரு தவறை இழைக்க எமது கட்சி உறுப்பினர்கள் தயாரில்லை' - என்றார். (ம-44)

## வனவளத்துறையினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

முல்லைத்தீவு, பெப். 27

சட்டவிரோதமரக்கடத்தல் காரர்கள் என்று நம்பப்படும்நபர்கள் வனவளத்திணைக்கள அதிகாரி மீது நேற்றுமுன்தினமிரவு தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பாலைப்பாணி வன்னிவிளாங்குளம் வீதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பாலைப்பாணி கிராமத்திலிருந்து வாகனத்தில் சட்டவிரோதமாகமரக்குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று மாங்குளம் வன வளத்திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வனவளத்திணைக்கள அதிகாரிகள் சட்டவிரோத மரக்கடத்தல்காரர்களின் வாகனத்தைத் தடுக்க முற்பட்டுள்ளார்கள். இதன்போதே கடத்தல்காரர்கள் வனவளத்திணைக்கள அதிகாரிகளின் மோ. சைக்கிள் மற்றும் அதிகாரி மீது வாகனத்தால் மோதித் தள்ளிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். மாந்தை கிழக்குப் பகுதிக்குப் பொறுப்பான வன வளத்திணைக்கள அதிகாரியான எம். டி. என். குணதிலக (வயது 30) காயமடைந்து மாங்குளம் ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மாங்குளம் பொலிஸார் தாக்குதல்தாரிகளைத் தேடுகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-19)

## வீரதுங்கவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப். 27

மிக் விமானங்கள் கொள்வனவுநிதிமோசடி தொடர்பில், கைதுசெய்யப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

# ஆசிரியரை நியமிக்கக் கோரி தொடர்கின்றது போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 27

வவுனியா, வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களை நியமிக்கக் கோரி பெற்றோர்களும் மாணவர்களும் நேற்று வீதிக்கு இறங்கியமையால் குழப்ப நிலை ஏற்பட்டது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காலையில் தினமும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

கணக்கீடு, வர்த்தகம், இந்துநாகரிகம், கணிதம், தமிழ் மற்றும் கலை பாடங்களான சித்திரம், சங்கீதம் இரண்டாம் மொழி பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

அதனைநிவர்த்திசெய்யுமாறுகூறி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்று நெளுக்குளம் நேரியகுளம் பிரதான வீதி முன்பாக ஒன்று கூடிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் குழப்பநிலை ஏற்பட்டது.

ஆசிரியர்களை உடனடியாக நியமிக்குமாறு கோரியே அவர்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர். அங்கு வந்த வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஸ்ணன் பெற்றோர்களுடன் கலந்துரையாடினார்.

அவருடன் பெற்றோர்கள் முரண்பட்டனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஆசிரியர்களை நியமிப்பார் என வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தார்.

அதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. (த-110)

# கடற்கரையில் புதைத்த 6 கிலோ கஞ்சா மீட்பு

## மூவர் கைதாகி விசாரணையில்



முல்லைத்தீவு, பெப். 27

புதுக்குடியிருப்பு சுண்டிக்குளம் கடற்கரையில் மண்ணினுள் புதைத்து வைத்திருந்த நிலையில் சுமார் 6 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனுடன்தொடர்புடையகுற்றச்சாட்டில்மூவர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் சந்தேகத்தின் பேரில் மூவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கஞ்சாவின் பெறுமதி சுமார் 9 லட்சம் ரூபா. கைதானவர்கள் 41,39,26 வயதுடைய குடும்பத் தலைவர்கள். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-19)

# மாணவனுக்கு சைக்கிள்

கொடிகாமம்,பெப்.27

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியா லயத்தின் தரம் 6 இல்கல்விகற்கும்மாணவனுக்கு சைக்கிள்அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தி பெற்ற மாணவன் ந.கோபிநாத்துக்கே சைக்கிள் வழங்கப்பட்டது.



பெரியதம்பி மார்க்கண்டு ஞாபகார்த்தமாக மாணவனுக்கு சைக்கிள் வழங்கப்பட்டது. (க-159)

# தவக்காலச் சிந்தனை

## மகிமையின் வழி சிலுவை

'ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக்கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (லூக்.9:25)

நாம் எமது வாழ்வை அன்றன்று தகவமைத்துக்கொள்ள உலகம் முழுவதையும் தமதாக்கிக்கொள்ளும் அளவுக்குத் தகவல் தொடர்பாடல்கள் எமது விரல்நுனிகளில் கையடக்கமாய் உள்ளன.

ஊடகங்களின் ஊடுருவலால் நம்வாழ்வை வெற்றி கொண்டோமா? இழந்து கொண்டிருக்கிறோமா? செல்வம் பட்டம் பதவி, அதிகாரம் எவ்வளவு குவிந்திருந்தாலும் பிறர் வாழ்வுக்காக அதனைப் பகிர மனமற்று பதுக்கிவைத்தால் நிம்மதி தோன்றுமா? நல்வாழ்வு பிறக்குமா?

பிறர் நலத்துக்காக சுயநலத்தை இழந்துதான் ஆகவேண்டும் அன்பை வாழவைக்கப் படிஇறங்கி பணியாற்றத்தான் வேண்டும். கடைசி சுவாசம் வரை விரோதியையும் மன்னித்துத்தான் ஆகவேண்டும் இதுவே நாம் நிலைவாழ்வை எமதாக்கிக் கொள்ளும் வழியாகும். இடர்களையும், தடைகளையும் தொடர்ந்து சந்திக்கும்போது அதன் மறுமுனை நிச்சயம் இனிமையும் வெற்றியுமாக அமையும்.

கடவுளின் கட்டளைப்படி வாழ்வதும் மதிப்பீடுகளின்படி ஒழுகுவதும் சுலபமல்ல. இதனையே இயேசு சிலுவையைத் தூக்கி வரட்டும் என்கிறார். எமது அன்றாட சுமைகளையும், பிறரது துன்பங்களையும் பொறுமை, சகிப்புத் தன்மையுடன் தாங்கிச் செல்வோம். புடமிடும் உலையிலிருந்து புறப்படும் பொன்போல் எமது வாழ்வு துலங்கும்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை



# விரைவில் ரணில் மீது சி.ஐ.டி விசாரணை!

## மிரட்டுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு, பெப். 27

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த வாரமளவில் சி.ஐ.டியினர் விசாணைக்கு அழைக்கக் கூடுமென இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மின்சக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவு க்கும் இடையில் இடம்பெற்றுள்ள கலந்துரையாடலொன்றில் என்னைப் படுகொலை செய்வது தொடர்பில் பேசியிருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவும் ரஞ்சனின் திட்டத்துக்கு சரியெனக் கூறியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் நான் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ளேன். குறித்த குரல் பதிவு தொடர்பி லான இரசாயன பகுப்பாய்வு அறிக்கை நாளை கிடைக்கப்பெறவுள்ளது. அதன் பிரகாரம் அடுத்தவாரமளவில் சி.ஐ.டியினர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விசாரணைகளை மேற்கொள்ள அழைப்பு விடுப்பார்கள்.

இதேவேளை, பிணைமுறி மோசடியின் முக்கிய சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்கவே. இதற்கான அனைத்து ஆதாரங்களும் உள்ளன. சட்ட மாஅதிபர் இவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பத ற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமது அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற எயர் பஸ் மோசடி, மிக் விமான கொள்வனவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில்தான் மிகவும் வித்தியாசமான முறையில் மோசடிகளும் ஊழல்களும் இடம்பெற்றுள்ளன. அவர்களுக்கு எதிராக கட்டாயம் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

(ம-24)

### சட்டவிரோத

# மணல்க் கடத்தலால் உடைந்தது பாலம்

முல்லைத்தீவு, பெப். 27

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் சட்டவிரோத மணல்கடத்தல் காரர்களின் கனரக வாகனங்களின் போக்குவரத்தால் கட்டுமானப் பணிகள் இடம்பெற்ற பாலம் ஒன்று உடைக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் நேற்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

(ம-19)



அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் தலைமன்னார் முதல் தமிழகத்திலுள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 10.15 மணி நேரத்தில் நேற்று நீந்திக் கடந்தார். (ம)

### யாழ்ப்பாண...

தற்கான வேலைத்திட்டத்தின் நேர்முகத் தேர்வுகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 செயலர் பிரிவுகளிலில் இருந்தும் மொத்தமாக 26 ஆயிரத்து 66 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நெடுந்தீவு 448, ஊர்காவற்றுறை 784, வேலணை 863, யாழ்ப்பாணம் 632, நல்லூர் 1,967, சங்கானை 2,575, சண்டிலிப்பாய் 2,217, கோப்பாய் 3,394, காரைநகர் 628, உடுவில் 2,246, சாகவச்சேரி 3,331, தெல்லிப்பளை 1,673, கரவெட்டி 1,917, பருத்தித்துறை 2,262, மருதங்கேணி 1,129 உள்பட 26 ஆயிரத்து 66 பேர் நேர்முக தேர்வுக்கு தோற்றுகின்றனர்.

(ம-67,4,19,26,56,105,110,214)

### இலங்கைக்கு...

எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்' இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவாவுக்கான இயக்குநர் ஜோன் பிசர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து அரசு விலகுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஜெனிவாக் கூட்டத் தொடரில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னரே ஜோன் பிசர் தனது டுவிட்டரில் மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்க்ளுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை வெளியேறுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் எவரும் ஏமாறக்கூடாது. போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ராஜபக்ஷக்கள் பொறுப்புக்கூறுதலை முன்நகர்த்துவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்' என்றுள்ளது. (ம-22)

### பணிஸ்...

இடத்துக்கிடம் மாறுபட்டதாக உள்ளது. உதாரணத்துக்கு நகரப் பகுதிகளில் 40 ரூபாவாக உள்ள கறி பணிஸ்களின் விலை கிராமப்புறங்களில் 30 ரூபாவாக உள்ளது. இதனால் அந்தந்தப் பகுதிகளில் விற்கப்படும் விலைகளில் இருந்து 5 ரூபா குறைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் பாணின் விலை தற்போது குறைக்கப்படவில்லை. எனினும் அடுத்த வாரத்தில் பாணின் விலையும் குறைக்கப்படும் வாய்ப்புள்ளது - என்றார்.

(ம)

### தீர்மானத்திலிருந்து...

இவ்வாறு ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43ஆவது கூட்டத் தொடரில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன. சுவிஸ் நேரப்படி நேற்றுக் காலை 10 மணிக்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'குறித்த தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கையின் அரசமைப்புக் கட்டமைப்பை மீறி செயற்படுத்த முடியாது. இந்தப் பரிந்துரைகள் இலங்கையின் இறையாண்மையை மீறியதாக அமைந்துள்ளன. கடந்த அரசு அனைத்து ஜனநாயக நடைமுறைகளையும் மீறியே இந்தத் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கியது. இதற்கு அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் ஒப்புதல் பெறப்படவில்லை. எனவே எனவே, இந்தத் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகுகின்றது ' என்று அறிவித்தார். (ம-22)

### ஏப்.25...

திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஏனைய தேர்தல்களுக்கான திகதியை நியமிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் காணப்படுகின்ற போதிலும், நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே தங்கியுள்ளது.

சித்திரைப் புதுவருடப்பிறப்பு மற்றும் வெசாக் பூரணை தினம் ஆகியன வருவதால் பெரிய சிரமங்களுக்கு மத்தியில் தேர்தலை நடத்தவேண்டி ஏற்படும். இந்தக் காலப்பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை அதிகமாகக் காணப்படுவதாலேயே பெரும் சிரம நிலை ஏற்படும்' - என்றார். (ம-22)

### இராணுவப்...

சைக் கேட்டுத்தான் மருதானார்மடத்தில் விடுதியொன்றில் இராணுவத்தினர் புகுந்தனர் என்பது நகைப்புக்குரியது. அந்தச் சம்பவத்துக்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்புகளுமில்லை என்று தெரிவித்துள்ளார் சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் தர்சன்.

மருதனார் மடத்தில் கடந்த திங்கட்கிழமை விருந்தினர் விடுதி ஒன்று இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த இளைஞர்கள் விசாரணையின் பின்னர் விடுக்கப்பட்டிருந்தனர். இந்த நடவடிக்கை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சதி வேலை என்றும், சம்பவ நேரத்தில் சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் அந்த இடத்தில் இருந்தார் என்றும் விருந்தினர் விடுதியின் உரிமையாளர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது


பிரதேச சபைத் தவிசாளர் என்ற ரீதியில் தினமும் இரவு சந்தைப் பகுதிகள் என்பவற்றைப் பார்வையிடுவது வழமை. சம்பவ நாளான்று இரவு வழமை போன்று நான் நகர்ப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அப்போது விருந்தினர் விடுதி உள்ள பகுதியில் அதிகளவு இராணுவத்தினரும் நின்றிருந்தனர்.

அந்த விருந்தினர் விடுதி பிரதேச சபை உறுப்பினருடையது என்று எனக்குத் தெரியும். அவரும் அப்போது அங்கு நின்றிருந்தார். அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டறிந்தேன். அங்கு நின்றிருந்த பொலிஸாரிடமும் விசாரித்தேன். இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதால் தற்போதைக்குத் தமக்கு எதுவும் தெரியாது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதன்பின்னர் நான் அங்கிருந்து அகன்றுவிட்டேன். இதுதான் நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை எதிர்கொள்ள முடியாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்ட சதி வேலை இது என்று விருந்தினர் விடுதி உரிமையாளர் குற்றஞ்சாட்டுவது வேடிக்கையானது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இணைந்துள்ள நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவருக்கு எதிராக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் விருந்தினர் விடுதியின் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறியதைக் கேட்டே இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தனர் என்று கூறுவது நகைப்புக்குரியது. எனது தலைமையில் உள்ள பிரதேச சபை உறுப்பினர் என்ற காரணத்தால், அரசியல் நாகரீகம் கருதியே சம்பவ தினத்தன்று அவரிடம் சென்று உரையாடினேன். ஆனால் அவரோ திரித்து இப்படி அபாண்டமான கருத்துக்களை வெளியிட்டிருப்பது மனவேதனையைத் தருகின்றது. என்றார். (எ)

### நோயாளர்களிடம்...

மாதாந்த சிகிச்சைக்கென (கிளினிக்) வழங்கப்படும் சான்றிதழ்களை ஒத்ததாகப் போலிச் சான்றிதழ்களைக் குறித்த நபர் தயாரித்திருந்தார். அந்தச் சான்றிதழோடு வந்து, கிளினிக் நோயாளர்களுடன் சேர்ந்து தானும் அதிகாலையிலேயே வரிசையில் காத்திருப்பார். தனியாக வரும் முதியவர்கள் அல்லது ஏமாற்றக்கூடியவர்களை இனம் கண்டு கொள்ளும் குறித்த மோசடிப் பேர்வழி, அவர்களிடம் இருந்து பணம் மற்றும் நகைகளை அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்று விடுவார் என்று கூறப்படுகின்றது. அவர் நேற்றும் இவ்வாறு தன் கைவரிசையைக் காட்ட முற்பட்ட போதே அங்கிருந்த ஏனையோர் வழங்கிய தகவலின்படி அவர் பிடிக்கப்பட்டார். மருத்துவமனை நிர்வாகத்தினர் அவரை யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த-105)

# மரண அறிவித்தல்கள்



## Dr. பொன்னுத்துரைசிவபாலன்

நீர்வேலியை பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. பொன்னுத்துரை சிவபாலன் கடந்த (25.02.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நர்சிகா பாலேந்திரா, தில்சிகா கிருபாகரன், கிருசிகா சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வாஷ்னா, ரெல்வின், அகீவ், திமேகா, கிஸ்ரன், கிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவனேசன், சிவேந்திரன் மற்றும் சிவதாசன், காலஞ்சென்ற சிவராணி மற்றும் சிவாநந்தன், சிவசுப்பிரமணியம், தியாகி பொன். சிவகுமார், காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.



## கந்தவேள் கதிரநாயகமணி

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல.18, வேம்படி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவேள் கதிரநாயகமணி 25.02.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் கந்தவேளின் பாசமிகு மனைவியும், விசுவநாதம் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர் Techno Medic Company), கற்பகஜோதி (ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி), மயூரன் (பணிப்பாளர் - News First - செய்திப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சித்திரவேல் நாயகமணி மற்றும் தேவநாயகமணி ஆகியோரின் சகோதரியும், சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), பிரசாந்தன் (ஆசிரியர் - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ரனித்தா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமியும், பவிஷானா, சிந்தனா, அருணியன், கிருஷ்ஆதர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

077 363 0885

(J.11478)
(13.17)



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி கற்பகஜோதி பிரசாந்தன்
அவர்களின் தாயார்
**கந்தவேள் கதிரநாயகமணி**
25.02.2020 அன்று காலமானார்.
இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13.17)

ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி


எமது பிரதேச செயலகத்தில்
கிராம அலுவலராக கடமையாற்றிய
அமரர்
**சிறில் ரவிநேசன்**
அவர்களின் மறைவிற்கு
எமது விழிநீர் அஞ்சலியை
தெரிவித்துக்கொள்கின்றோம்.



தோற்றம் 15.01.1984 மறைவு 23.02.2020

நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பளை.

## மரண அறிவித்தல்



## செல்லையா சந்திரசேகரம்

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரன் என்று அன் பாக அழைக் கப்படும் செல்லையா சந்திர சேகரம் நேற்று (26.02.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லையா - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீறங்கன் (பிரான்ஸ்), மாலினி (கனடா), ஸ்ரீதரன், ஜெயந்தி, காலஞ்சென்ற லவக்குமார் மற்றும் கஜந்தி, காலஞ்சென்ற ஜெயந்தன் மற்றும் சசிக்குமார் (பிரான்ஸ்), காலஞ் சென்ற அஜி ஆகியோரின் தந்தையும், நந்தா, சிவநாதன், நிர்மலா, திலகேஸ்வரன் (கண்ணன் - யா/ பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்), அருந்த வராசா (R.D.A), வனஜா ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, வேதநாயகம், தவேஸ்வரி மற்றும் சீவரத்தினம் ஆகியோரின் சகோரதனும், வசீகரன், கிருஷாந், ஜோன்டாவிட், ஜோன் பியர், ஜெமிமா, தினேஸ்ராஜா, பிரவீன்ராஜா, ஷாலினி, பிரியா, தர்சினி, தர்சிகா, கஸ்தூரி, கௌசலியா, உதயசூரியா, பிரதீப், கிருசாந், பிரியங்கா, மதுசாந், விதுஷன், பிரிந்தா, கனிஇசை, பிரேனிகா, மீரா, கவி, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 104/1, ஆனந்தன் வடலி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (27.02.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

104/1, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.
(e.31520) (13.17)

தகவல்: குடும்பத்தினர்.
075 523 1475

## மரண அறிவித்தல்

## பொன்னர் மகேந்திரன்

(இளைப்பாறிய கிராமஉத்தியோகத்தர்)



கற்பகப்பிள்ளையார் கோவிலடி, பருத்தித்துறை பிரதான வீதி கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் மகேந்திரன் (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்) நேற்று (26.02.2020) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - பொன்னியம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - குழந்தையம்மா தம்பதிகளின் மருகனும் காலஞ்சென்ற நோகேஸ்வரியின் அன்புக் கணவரும் தனுசுயா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேசசபை), ராஜி (மேலதிக மாவட்ட பதிவாளர் -உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), சிறிராசா (சிரேஷ்ட நிறை வேற்று கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சவி, ரிஷ்ஜிகன், லக்ஷாயகி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
பருத்தித்துறை பிரதான வீதி, கோப்பாய் தெற்கு,
இருபாலை

தகவல் : குடும்பத்தினர்
077 735 2174, 077 965 2976

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111



விலை 700/-

தனிப்பிரதி தேவையானோர் தொடர்பு கொள்ளவும். அனுப்பி வைக்கப்படும்.

# விற்பனையாகின்றது

**தரம் 4, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கான**

# நுண்ணறிவு

**(வினாக்களும் விடைகளும்)**

எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆக்கம் : ஆசிரியர் M. சுகந்தன் *(B.A, Dip. in. Teaching, PGDE)*
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

எமது வெளியீடு :
மாணவர்களுக்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் முதன்மை நிலை 01 (தரம் 1, 2)
முதன்மை நிலை 02 (தரம் 3, 4), முதன்மை நிலை 03 (தரம் 5)

வெளியீடு : **யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்,**
இல. 10 – 1/5, *(No. 342, Trust Complex, Sea Street)* முதலாம் மாடி,
ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு – 13. தொலைபேசி : 077 – 6258778

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION - GRADE 1 in 2021 & G.C.E A/L (2023 BATCH) in 2020

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 28.02.2020 முதல் 20.03.2020 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.03.2020 திங்கட்கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்படவேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஞாயிற்றுக்கிழமையும், விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா. 1000.00
5. வயதெல்லைகள்:
   தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2015 க்கும் 31.01.2016 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   தரம் 12 (A/L 2023 Batch) விண்ணப்பதாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்கள்

## சட்ட விரோதமாக பனை தறிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### பனை அபிவிருத்திச் சபை அறிவுறுத்தல்.



சட்ட விரோதமாக பனை மரங்கள் தறிக்கும் செயற்பாடுகள் அதிகரித்து வருவதால் பனை வள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தண்டனைச் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பனை அபிவிருத்திச் சபை இவ் விடயம் தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறு தெரியப்படுத்துகிறோம்.

இவ் விடயம் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் அறிவுறுத்தலானது. தமிழர் பாரம்பரியத்தின் சின்னமாகவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மதிப்பிட முடியாத பொக்கிசமாகவும் விளங்கும் கற்பக விருட்ஷமாகிய பனை வளத்தினை அழிய விடாது பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை சமூக அக்கறையுள்ள அனைவரையும் சார்ந்துள்ளது. இவ் வளத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

பனை வளத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிவரும் இப் பனை வளத்தினை வருடாந்தம் பல்வேறு காரணங்களைக் காட்டி அழித்து வருகின்றமை மிகவும் மன வேதனைக்குரிய விடயமாகும்.



பனை வள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலும் பனை வளத்தினை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்காகவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு 1993 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 452 ம் அத்தியாயமான மரங்கள் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தில் (2) ம் பிரிவில் கீழ் பனை தறித் தலானது தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளில் பனை மரங்கள் சட்ட விரோதமாக தறிக்கப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்தும் பாரிய கடமையினை பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்கள் மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்களும் சட்ட விரோத பனை தறித்தல் தொடர்பான தகவல்களை சிறப்பாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்விடயம் சார்பாக சகல சட்டநடைமுறைகளும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையால் இது தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் இச் சட்ட நடைமுறையால் பனை வளம் பாதுகாக்கப்படும். இவ்வளத்தினை நம்பி வாழும் மக்கள் நன்மையடைவார்கள் என்பதுடன் இவர்களது வாழ்வும் வளம் பெறும்.

- பனை அபிவிருத்திச் சபை-

### பெயர்மாற்றம்

20 யாழ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **ஜெகநாதன் விஜயகுமார்** ஆகிய நான் ஜெகநாதன் விஜயகுமார் ஆகிய எனது முதற்பெயரை இன்றிலிருந்து **சின்னசாமி விஜயகுமார்** என மாற்றிக்கொள்கின்றேன் என்பதை இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

சின்னசாமி விஜயகுமார்.

### வேலையாள் தேவை

நெல்லியடியில் உள்ள
**புத்தகக்கடைக்கு Typing** தெரிந்த
பெண் வேலையாள் தேவை.
மாதச் சம்பளம் - 15000/=

தொடர்பு: **077 599 1949**

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நாட்கூலி அடிப்படையிலோ, ஒப்பந்த அடிப்படையிலோ வேலை செய்யக்கூடிய பெயின்டர் (Painter) தேவை.

தொடர்பு - 077 985 1946, 077 592 5371

### வருடாந்த பொதுக்கூட்டம் 2020/2021

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர் சங்க 2020/2021 க்குரிய வருடாந்த பொதுக்கூட்டம்

இடம் : **மெமோறியல் அழகரத்தினம் மண்டபம்**
காலம் : **01.03.2020 ஞாயிற்றுக்கிழமை**
நேரம் : **காலை 9.30 மணி**

பழைய மாணவர் அனைவரும் தவறாது பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி நிருவாகசபையின் செயற்குழுக்களின் செயற்பாடுகளுடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக செயலாற்றுமாறு அழைக்கின்றோம்.

| அதிபர்/தலைவர் | செயலாளர் |
|---|---|
| ஆ.பேரின்பநாயகம் | ச.சுகிர்தன் |
| 077-4112489,021-2255112,021-2228688 | 077-1431708, 075-0410833 |

அல்வாய் வேவிலந்தை

### ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
### மஹா சத சண்டி ஹோமம் - 2020

மேற்படி யாகம் **28.02.2020** ஆம் திகதி தொடக்கம் **08.03.2020** ஆம் திகதிவரை வெகு சிறப்பாக **ஈழத்திலும் இந்தியாவிலும்** பிரசித்தி பெற்ற குருமார்களால் நிகழ்த்தப்பட்டு **08.03.2020 மாசி மகத்தன்று மாலையில் அம்பிகை இன்பர்சிட்டி கடலில் தீர்த்தமாடுவார்** என்பதனை அறியத்தருகின்றோம்.

(c.34247) (13.17) **ஆலய பரிபாலன சபையினர்.**

### பாராட்டி வாழ்த்துக்கள்




தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கொத்தணிக்கு பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவர் **கிரிசாந்த பத்திராஜ**
பொது முகாமையாளர் **M.P. லோகநாதன்** வருகையின் போது
தென்மராட்சி கொத்தணியின் தலைவர் **க. துரைசிங்கம்,**
பொது முகாமையாளர் **க. அருட்செல்வம்** ஆகியோர்
பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவரை கௌரவித்தபோது

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சி கொத்தனி.

(c.34248)(13.17)

### பாராட்டி வாழ்த்துகிறோம்




**பன்னாலையைச் சேர்ந்த சயந்தன் சிவசக்தி** தம்பதியரின்
**மூத்த புதல்வன்**

## செல்வன் சயந்தன் அபிராம்

அவர்கள் இன்று **(27.02.2020)** Sri Lanka Institute of Information Technology (SLIIT) பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் **Bsc (Hons) Degree in Information Technology, Specialization in Information Technology** பட்டத்தினை பெறுகின்றார். இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள் : **குடும்பத்தினர், உறவினர்.**

(c.31422) (13.17)



# வீடொன்றின் மீது நள்ளிரவு தாக்குதல்

## தென்மராட்சியில் துணிகரம்

கொடிகாமம், பெப். 27

தென்மராட்சி வரணி மாசேரி பகுதியில் உள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் த்தாக்குதல் நடத்தியுள்ளனர். மகேந்திரா ரக பட்டா வாகனத்தில் வந்த 13 பேர் கொண்ட கும்பலால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


வீடு, வீட்டின் நின்ற மினிபஸ், அருகில் இருந்த கதிரை என்பவற்றையும் அந்தக் குழு தாக்கியுள்ளது. குறித்த வீட்டிலிருந்தவர்கள் பொருட்களை உடைக்கும் சத்தம்கேட்டு வெளியில் வந்து பார்த்த போது 13 பேர் நின்றதைக் கண்டுள்ளனர். பாதுகாப்புக் கருதி மீண்டும் வீட்டுக்குள் சென்று கதைவைப் பூட்டி விட்டு அயலவர்களுக்கு தொலைபேசி மூலம் குறித்த சம்பவத்தை தெரியப்படுத்தியுள்ளனர். அயலவர்கள் முற்றுகையிடுவதற்கு முன்னர் குறித்த கும்பல் வாகனத்தில் ஏறி தப்பியோடியுள்ளது. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# உதயசூரியன் வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சிசுற்றுத் தொடரில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி திருக்குடும்பம்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 11:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது. (23)



# 2ஆவது டெஸ்டிலும் இந்தியா திணறும்

## நீல் வாக்னர் சவால்

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் வேகம் மற்றும் பவுன்சர் பந்தை எதிர்கொள்வது இந்தியாவுக்கு கடினமானதாக இருக்கும் என நீல் வாக்னர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. வெலிங்டனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

இரு அணிகளுக்குமான 2ஆவது போட்டி நாளைமறுதினம் கிறிஸ்ட்சர்ச் ஹேக்லி ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிக்கான ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான வகையில் தயார் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் டெஸ்டில் இடது கை வேகப்பந்து வீச்சாளரான நீல் வாக்னர் அணியில் இடம் பெறவில்லை. 2ஆவது டெஸ்டில் அவர் இடம்பெற்றுள்ளார். ஏற்கனவே டிரென்ட் போல்ட், டிம் சவுதி, கைல் ஜாமிசன் ஆகியோர் இந்திய பேட்ஸ்மேன்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். தற்போது நீல் வாக்னருடம் அவர்களுடன் இணைவது அணிக்குப் பெரும் பலம்.

இந்த நிலையில் வேகம் மற்றும் பவுன்சர்களை எதிர்கொள்ள இந்தியா திணறும் என நீல் வாக்னர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்திய அணி நியூசிலாந்து வந்து விளையாடுவது அவர்களுக்கு உண்மையிலேயே கடினமானதாக இருக்கும். இங்கு விளையாடும்போது கூடுதல் பவுன்ஸ் மற்றும் வேகத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்தியாவில் விளையாடும்போது அதிக அளவில் பவுன்ஸ் மற்றும் வேகம் இருக்காது. ஆகவே, இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களை மாற்றிக் கொள்வது புதிதாக இருக்கும்.

முதல் டெஸ்டில் எங்கள் பந்து வீச்சாளர்கள் எப்படி பந்து வீசினார்களோ அதேபோல் கிறிஸ்ட்சர்ச் போட்டியிலும் பந்து வீச முடியும் என்று நம்பிக்கை உள்ளது. இந்திய வீரர்கள் மீது நெருக்கடியை ஏற்படுத்த முடியும் என்றால், எங்களுடைய வேலையை எளிதாக்க முடியும்- என்றார்.

## கொரனோவால் கைவிடப்படுமா? ஒலிம்பிக் போட்டி

உலகையே அச்சுறுத்தியுள்ள கொரோனா வைரஸ் கட்டுக்குள் வராவிடில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் கைவிடப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜுலை முதல் ஓகஸ்ட் வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளையில், சீனாவில் பரவிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஜப்பானையும் கொரோனா வைரஸ் தாக்கம் விட்டு வைக்கவில்லை. இதனால், வரும் ஜுலை மாதம் ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பானில் திட்டமிட்டபடி நடத்தப்படுமா? என்று கேள்விகள் எழுந்தன.

இந்த நிலையில், மே மாதத்துக்குள் கொரோனா வைரஸ் கட்டுக்குள் வராவிடில் ஒலிம்பிக் போட்டிகள் கைவிடப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



# நியூசிலாந்துக்கு எதிரான ஆஸி. அணி அறிவிப்பு

நியூசிலாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள ஆஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்,இரண்டு ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலியா அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இரு அணிகளுக்கு மிடையிலான முதலாவது போட்டி மார்ச் 13ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தற்போது விளையாடி வரும் தென்னாபிரிக்கா தொடருக்கான ஆஸ்திரேலியா அணியில் கைல் ரிச்சர்ட்சன் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த அணியே நியூசிலாந்துக்கு எதிராக விளையாடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா அணி வீரர்கள் விவரம்:

ஆரோன் பிஞ்ச் (அணித் தலைவர்), ஆஷ்டோன் அகர், அலெக்ஸ் கேரி, பேட் கம்மின்ஸ், ஜோஸ் ஹசில்வுட், மார்னஸ் லபுஸ்சேன், மிட்செல் மார்ஷ், கேன் ரிச்சர்ட்சன், டி'ஆர்கி ஷார்ட், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், மேத்யூ வடே, டேவிட் வோர்னர், ஆடம் ஜம்பா.





## மெக்சிகோ ஓபன் டென்னிஸ்

# முதல் போட்டியில் நடால் வெற்றி

ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர டென்னிஸ் வீரரான ரபேல் நடால், மெக்சிகோ ஓபன் முதல் சுற்றில் எளிதாக வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மெக்சிகோ ஓபன் டென்னிஸ் அகாபுல்கோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் நட்சத்திர வீரரான ரபேல் நடால், பப்லோ அண்டுஜார்ஜ எதிர்கொண்டார். இதில் நடால் 6:3, 6:2 என்ற கணக்கில் கைப்பற்றி எளிதாக அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

நடால் கடந்த மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் காலிறுதியில் டொமினிக் தீம்மிடம் தோல்வியடைந்தார். அதன்பின் விளையாடும் முதல் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.27
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி ஜெயந்தி நகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது.

- - - - -

யாழ்ப்பாணம்.பெப்.27
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏபிசி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக் கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் மெகா நைட் பிறீமியர் லீக் மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நோநேம் துடுப்பாட்டக் கழக அணியை எதிர்த்து நொதன்ஸ்ரைககஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜப்னா றோயல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரைகிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# கிண்ணங்களை வழித்துத் துடைத்தது உடுப்பிட்டி அ.மி.கல்லூரி







வடமராட்சி,பெப்.27
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி ஆண்களிற்கான மூன்று பிரிவுகளிலும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர்.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

**16 வயது**

16 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அணி மோதியது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:21, 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர்.

**18 வயது**

18 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி மோதியது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:22, 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர்.

**20 வயது**

20 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி மோதியது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 25:20, 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர். (422)


# கிண்ணம் வென்றது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம்,பெப்.27
212ஆவது இராணுவ படைப் பிரிவினரால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 20 வயதுப் பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பழைய பூங்காவில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் திடலில் இரவு 7 மணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 73:72 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. சிறந்த வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர் விபூஸணன் தெரிவானார். (23)





# நுண்கடன் ஒழிப்பு:





# மத்திய வங்கி எடுத்த நடவடிக்கைகள்

கடன் நெருக்கடிக்கெதிராக இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பரந்தளவிலான முன்னெடுப்புக்கள் மற்றும் பல்முனைகளைக் கொண்ட அணுகுமுறைகளின் விவரமும் இற்றைப்படுத்தலும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ளன.

**வலுப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை வழிமுறைகள்**

உதாரணமாகப் பிற்பகல் 5 மணிக்கு பின்னர் வீடுகள் மற்றும் கிராமங்களுக்கு செல்வதால் இடம்பெறும் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை இடைநிறுத்துதல் என்ற வடக்குக்கு மாத்திரமாக இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பணிப்புரை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் கண்காணிக்கவும் படுகின்றது. திடீர் தள பரீட்சிப்புகள் மூலம் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளை மேற்பார்வை செய்தல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



**புதிய கிளைகளைத் திறப்பதற்கான அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன**

அதியுயர் வங்கி அடர்த்தி மற்றும் வடக்கிலுள்ள வங்கியியல் நிறுவனங்களுக்கிடையிலான கடுமையான போட்டி என்பவற்றைக் கருத்தில் கொண்டு வடக்கில் வங்கி மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் புதிய கிளைகளுக்கான அனுமதி வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் வங்கிகளற்ற பிரதேசங்களை நோக்கிய கிளைகளின் சாத்தியப்பாடான இடமாற்றல்கள் வசதிப்படுத்தப்படுகின்றன. (வடக்கின் வங்கி அடர்த்தியானது 2017 இன் இறுதியிலுள்ளவாறான 23.0 இலிருந்து 2018 இறுதியில் 22.2க்கு வீழ்ச்சி யடைந்துள்ளது.)

**நுண்கடன்களின் பதிவழிப்பு**

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நுண்கடன்களைப் பெற்ற பெண்களின் கடன்கள் நிபந்தனைக்குட்பட்டுப் பதிவழிக்கப்பட்டுள்ளன. (வடக்கில் ரூ. 145.59 மில்லியன் பெறுமதியான 5 ஆயிரத்து 81 கடன்கள் பதிவழிக்கப்பட்டுள்ளன).

**படுகடன் நிவாரணி கடன்**

அரச பாதீட்டு உதவியோடு 2019 டிசெம்பர் இறுதியில், ரூ. 466.9 மில்லியன் பெறுமதியில் 20 ஆயிரம் ரூபா மற்றும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 23 ஆயிரத்து 345 அரவணைப்புக் கடன்கள் (இலகுகடன்கள்) கூட்டுறவுத்துறையால் வழங்கப்பட்டதுடன், அவை தொடர்ந்தும் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களினைக் கட்டியெழுப்புதல்**

அரச பாதீட்டு உதவியோடு ரூ. 457 பில்லியன் பெறுமதியுடைய, அதிகரித்த வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட 50 கூட்டுறவுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்பும் செயல்முறை நடைமுறையிலுள்ளது.

**உதவிக் கரும பீடங்கள்**

நிதி தொடர்பில் பொதுமக்களை வழிநடத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் உதவிக் கருமபீடமொன்று தொழிற்பாட்டிலுள்ளதோடு வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைத்தலோடு வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு பொருத்தமான தீர்வுகள் நபருக்கு நபர் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

> “நிதி தொடர்பில் பொது மக்களை வழிநடத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் உதவிக் கருமபீடமொன்று தொழிற்பாட்டிலுள்ளதோடு வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைத்தலோடு வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு பொருத்தமான தீர்வுகள் நபருக்கு நபர் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்திலிருந்து தொலைவிலுள்ள மக்களுக்கு உதவுவதற்காக வடக்கின் ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் உப உதவிக்கருமபீட அலகு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

**நிதி விழிப்புணர்வுப் பரப்புரைகள்**

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தால் வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வெகுசன ஊடகங்கள் மற்றும் பிற வழிகளைப் பயன்படுத்தி நிதி விழிப்புணர்வுப் பரப்புரைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. அரச மற்றும் பிற துறைசார் அலுவலர்களுக்கு நிதி அம்சங்கள் குறித்தான பயிற்சிகள் பொதுமக்களைச் சென்றடையும் நோக்கோடு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. (2017 தொடக்கம் 2019 வரையிலான காலப்பகுதியில் 21 ஆயிரத்து 355 வளர்ந்தோர் மற்றும் மாணவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்)

**உச்சவட்டி வீத எல்லை நடைமுறைப்படுத்தப்பட்டது**

2018 டிசெம்பர் 3 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நுண்கடன்கள் மீதான உச்சவட்டி வீத எல்லை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**வாடிக்கையாளர் சாசனம் வெளியிடப்பட்டது**

வாடிக்கையாளர்களின் நலன்கள் மற்றும் உரிமைகளை பாதுகாத்தலை உறுதிப்படுத்தும் விதத்தில் 2018 ஜனவரி 16 ஆம் திகதி வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பொன்று வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**முன்மொழியப்பட்ட கடன் ஒழுங்கு முறை ஆணைய சட்டம்**

கடன் ஒழுங்குமுறை ஆணைய சட்டம் முன்மொழியப்பட்டு அங்கீகாரத்துக்காக வழங்கப்பட்டுள்ளது.

**வடமாகாண முதன்மை திட்டமொன்றிற்கான பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு**

இலங்கை மத்திய வங்கி “வடமாகாண முதன்மைத் திட்டமொன்றிற்கான பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு” ஒன்றை முன்வைக்க வசதிப்படுத்தியதுடன் ஒட்டுமொத்த வடபுலத்தின் நிலைத்த விருத்தியைக் கருத்திலெடுக்கும் அடிப்படைக் கட்டமைப்பாக இந்த அறிக்கையானது 2019 பெப்ரவரி 8ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

**கிராமிய கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்தல்:**

கிராமிய படுகடன் மற்றும் கொடுகடன் தொடர்பிலான தற்போதைய தேவைகளைப் பதிலீடாகப் பூர்த்தி செய்வதற்காக வடமாகாணத்திலுள்ள கிராமிய கூட்டுறவு வங்கிகளின் தொழிற்பாடுகள், முறைமைகள் மற்றும் மனித வளங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு வடக்கின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் வழிநடத்தப்பட்ட அவசியமான கூட்டு நடவடிக்கைகள் நடைமுறையிலுள்ளன.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தடிமனும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும்?

நாளும் பொழுதும் மெதுவாக இலங்கைக்கு இராணுவச் சீருடை போர்க்கப்பட்டு வருகின்றது. இன்னும் சில மாதங்களுக்குள் ஒட்டுமொத்தமாக முற்றுமுழுதாக இராணுவ ஆட்சிக்குள் இலங்கை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற நிலையிலேயே காரியங்கள் நடந்தேறி வருகின்றன.

கோத்தாபய ஜனாதிபதியானவுடனேயே, வடக்கு கிழக்கு பகுதிகளில் முதலில் பட்டாசு வெடித்துக் கொண்டாடியது படையினர்தான். அப்போதே தெரிந்துவிட்டது, இனிவரும் காலங்கள் அவர்களுடையவை என்று. இருப்பினும் காலமும், பட்டறிவும் கோத்தாபயவை இராணுவ மனோநிலையில் இருந்து விடுவித்து , பக்குவப்பட்ட மனிதராக மாற்றியிருக்கும் என தமிழர்கள் நம்பினார்கள். அப்படி நிறையப் பேர் மாறிய பல சம்பவங்கள் வரலாற்றின் ஏராளமான பக்கங்களில் பதிவாகியிருக்கின்றன. என்றாலும் கோத்தாபய அப்படியான ஆள் இல்லை என்பதை பதவியேற்பின் போதும் சரி, அண்மையில் நடந்து முடிந்த இலங்கைச் சுதந்திர தினத்தின் போதும் சரி அவர் நடந்து கொண்ட விதமும், அவர் அணிந்த உடைகளில் வெளிப்பட்ட குறியீடுகளும் நிரூபித்திருக்கின்றன.

எல்லா வைபவங்களிலும் முப்படைகளுக்கும் முக்கியத்துவமளிக்கும் கோத்தாபய, அதன் பின்னர் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களிலும் படையதிகாரிகளை , நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவிகளில் இருத்தத் தொடங்கினார். ஆளுநர் முதல் சுங்கப் பணிப்பாளர் வரை இந்த இராணுவப் பிரசன்னம் உயர்மட்டப் பதவிகளில் தொடர்கின்றது. இவ்வளவு காலமும் உயர் பதவி நிலைகளிலேயே படையதிகாரிகளை நியமித்து, தன்னுடைய இராணுவ ஆட்சிக்கான அறிகுறிகளைக் காட்டி வந்த ஜனாதிபதி கோத்தாபய, இப்போது அடிமட்டத்துக்கும் இறங்கிவிட்டார்.

வீதிப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளில் இராணுவப் பொலிஸாரைக் களமிறக்கிய கோத்தாபய, அடுத்தடுத்த நாட்களிலேயே விமான, கடற்படையினரையும் இந்தப் பணியில் இணைத்து விட்டார். இப்போது முப்படையினரும் , பொலிஸாரோடு இணைந்து போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணுவதற்காக தலைநகரின் வீதிகள் எங்கும் நிறைந்துள்ளனர். அதைவிட வடக்கில், பொலிஸாருக்கு மேலதிகமாக படையினரின் சோதனைகளும், வழிநெடுகத் தொடர்கின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்ல வேண்டுமென்றால் நாலைந்து சோதனைச் சாவடிகளில் ஏறி, இறங்கியே போக வேண்டும். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு சந்தியில் பொலிஸார் மறித்து, பயணிகளை இறக்கிச் சோதனையிடுவார்கள். அதன் பின்னர் தமது உடைமைகளோடு மீண்டும் பஸ்ஸுக்குள் பயணிகள் ஏறி, சில நூறு மீற்றர் தூரம் கூடப் போக முதல், எதிரே படையினரின் சோதனைச்சாவடி தென்படும். அங்கும் அதேமாதிரி பயணிகள் எல்லோரும் இறக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, பதிவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பயணிக்க முடியும். இப்படி ஏட்டிக்குப் போட்டியாக பொலிஸ்,இராணுவச் சோதனைச் சாவடிகள் வடக்கில் மீண்டும் இராணுவப் பிரசன்ன அதிகரிப்பை உணரவைக்கின்றன.

ஆனாலும் இராணுவ ஆட்சிக்குள் வாழ்தலென்பது நமக்குப் புதிதல்ல. கடந்த சில வருடங்களுக்கு முன்வரை இராணுவ ஆட்சிக்குள் வாழ்ந்தவர்களே தமிழர்கள். ஆனால் தெற்கில் அப்படியல்ல. அவர்கள் இராணுவத்தினரைக் கண்ணால் காண்பதே அரிது என்பது போலவே அங்கு படையினரின் நடமாட்டம் இருக்கும். இப்போது அதுதலைகீழாகிக் கொண்டு வருகின்றது. இப்போது போக்குவரத்தை ஒழுங்குபடுத்த என்று சொல்லி வீதிகளில் இறக்கிவிடப்பட்டுள்ள படையினர், போகப் போக சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காக என்ற போர்வையில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, சகல பகுதிகளிலும் நிறைக்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதையே இப்போதைய சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன. அப்படி நடக்கும் பட்சத்தில் வேலியில் போன ஓணானை, தங்கள் வாக்குகளால் வலிந்து வேட்டிக்குள் விட்ட அவஸ்தையை சிங்கள மக்களும் உணரத்தான் போகிறார்கள். அப்போதுதான் இத்தனை தசாப்தங்களாக தமிழ் மக்கள் இராணுவ ஆட்சிக்குள் பட்ட வலியையும், வேதனையையும் சிங்கள மக்களாலும் உணரமுடியும். தடிமனும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும்?


# வடக்கு உட்பட நாட்டில் முடங்கின பாடசாலைகள்

### இன்று தொடக்கம் சட்டப்படி வேலை

### 16ஆம் திகதியிலிருந்து மீள சுகவீனவிடுப்பு

**யாழ்ப்பாணம், பெப். 27**

**ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்திவடக்கு மாகாணம் உட்பட நாடுமுழுவதும் அவர்கள் நேற்றுச் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் குதித்தனர். அதனால் பாடசாலைகள் முடங்கின.**



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னாரில் பாடசாலைகள் முடங்கின. சுகவீனவிடுப்பு என்பதை ஆசிரியதொழிற்சங்கங்கள் முன்னரே அறிவித்து விட்டமையால், மாணவர்கள் நேற்றுப்பாடசாலைக்குச்செல்லவில்லை. சென்றிருந்த சில மாணவர்கள் திரும்பி வீடு நோக்கிச் சென்றமையை அவதானிக்க முடிந்தது.

முன்னர் கூறியவாறே ஆசிரியர்கள் நேற்றுப் பாடசாலைக்குச் சென்றிருக்கவில்லை.

தவிர, யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆசிரியர்கள், அதிபர்கள் தமது கோரிக்கையை நிறைவேற்றுமாறு வலியுறுத்திக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது.

“23 வருடங்களாகக் காணப்படும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமையைக் கண்டித்து இந்தப்போராட்டம் இடம்பெறுகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைஆசிரியர்சங்கம், இலங்கைஆசிரிய சேவைச் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்றைய போராட்டம் இடம் பெற்றது.

இந்தக்கவனவீர்ப்புப்போராட்டத்தில்ஈடுபட்டவர்கள் “ சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு எங்கே, சம்பள முரண்பாட்டைத் தீர்க்க ஒன்றிணைவோம், இடைக்கால சம்பளத்தை வழங்கு, போராடுவோம் போராடுவோம் வெற்றிகிடைக்கும் வரை போராடுவோம், சம்பள சுற்ற றிக்கையை வெளியிட அழுத்தம் கொடுப்போம்” போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் கல்வி அமைச்சு முன்பாக ஒன்று திரண்ட ஆசிரியர்கள், அதிபர்கள் பெரும் போராட்டத்தில்ஈடுபட்டனர். அவர்களைக்கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டகாரர் கல்வி அமைச்சுக்குள் நுழைந்துவிடாதவாறு பொலிஸார் தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும், நேற்றைய போராட்டத்தின்போது, அமைச்சின் அதிகாரிகளுடன் கதைக்க வாய்ப்பிருக்கவில்லை. கல்வி அமைச்சில் உரிய தரப்புக்கள் இல்லாத காரணத்தால் வெறும் வாய்மொழிமூல உத்தரவாதங்களை ஏற்கப்போவதில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

அதனால் இன்று வியாழக்கிழமை தொடக்கம் காலை 7.30 மதியம் 1.30 வரை மட்டுமே அதிபர், ஆசிரியர்கள் கடமைபுரிவர். எதிர்வரும் 16 ஆம்திகதி தொடக்கம் 5 நாள்கள் சுகவீன விடுப்பில் ஈடுபடவுள்ளோம் என்றும் தொழிற்சங்கங்கள் அங்கு முடிவெடுத்துள்ளன என்று இலங்கை ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இடைக்கால சம்பள அதிகரிப்புத் தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக வெளியிடப்படவேண்டும். சட்டப்படியே பணிபுரிவர்.

ஏனைய மேலதிக செயற்பாடுகள் அனைத்தையும் புறக்கணிப்பர்.

உரிய தீர்வு கிடைக்கவில்லை யெனின், மார்ச் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 5 நாள்களுக்கு தொடர்ச்சியாக சுகவீன விடுப்புப் போராட்டம் இடம்பெறும் என்றும் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

(த-20, 106, 56, 110)

## உதயங்கவின் மறியல் நீடிப்பு


கொழும்பு, பெப். 27

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட உதயங்க வீரதுங்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இம்மாதம் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது அவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்க மறியல் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (எ)

## ரஞ்சனுக்கு பிணை



கொழும்பு, பெப். 27

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் நேற்று அவர் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்தே அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். எனினும் வெளிநாடுகள் செல்ல அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற செயற்பாடுகளில் தலையிட்ட குற்றச்சாட்டு தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (எ)

# மார்ச்சில் விடிவு கிடைக்குமா?

ஞா.பிரகாஸ்

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் காலப்பகுதியில் மலையகப் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று நல்லாட்சி அரசை பிரநிதித்துவப்படுத்தி வாக்குறுதி வழங்கியவர்கள் ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகளாக மலையக மக்களை நம்ப வைத்து கழுத்துறுத்து விட்டு தமது ஆட்சியை முடித்துக் கொண்டனர். இதன்தொடர்ச்சியாக 2019ம் ஆண்டு நவம்பர் 16ம் திகதி அன்று நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 1000 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கி புதிய அரசு ஆட்சிக்கு வந்திருக்கின்றது. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகவும் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராகவும் கொண்டமைந்த கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் 1000 ரூபாய் சம்பள உயர்வானது பேச்சளவில் மட்டும் காணப்பட்டு எட்டாக்கனியாகிப் போனது. ராஜபக்சக்களை கொண்டமைந்திருக்கும் இந்தப் புதிய ஆட்சியில் அது அமைச்சரவை தீர்மானம் எடுக்கும் அளவுக்கு ஒரு படி முன்னேறி வந்துள்ளது. ஜனவரி மாதம் 15 ஆம் திகதியன்று அன்று பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கும் தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதுடன், மார்ச் மாதம் முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் ஆயிரமாக அமைதல் வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டிருந்தார்.



### பலரும் பாராட்டு

அரசின் இந்தத் தீர்மானத்தை பலரும் அரசியல் கடந்து வரவேற்று வருகின்றனர். அதிலும் அரசுக்கு சார்பானவர்கள் தொழிலாளர்களின் போராட்டத்துக்குத் தீர்வு கிடைத்துவிட்டது. அதாவது அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் ஆயிரம் ரூபா சம்பளப் பிரச்சினை இப்போதே தீர்ந்து விட்டது போல் கருத்துக்களை முன் வைக்கின்றனர். கடந்த ஆட்சியாளர்கள் எடுக்கத் தயங்கிய தீர்மானத்தை இந்த அரசு எடுத்திருக்கின்றது. இப்போதைய நிலையில் அது வரவேற்கப்பட வேண்டிய தீர்மானம் மட்டுமேயாகும். நம்பிக்கை கொள்ள வேண்டிய உறுதி நிலையை இந்தத் தீர்மானம் இதுவரை அடையவில்லை.

இது அரசுக்கும் தனியார் துறைக்கும் இடையில் எதிரும் புதிருமாக நடைபெறும் விவகாரமாகும். அரசு புதிரான தீர்மானங்களை எடுத்தால் பெருந்தோட்டத் தனியார் கம்பனிகள் எப்போதும் அதற்கு எதிராகவே செயற்படுவார்கள். மைத்திரிபால சிறிசேன ஆட்சியிலும் அதுவே நடைபெற்றது. அன்றைய அரசு ஆயிரம் ரூபா வழங்க அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கத் தவறியது. ஆனால் தோட்டத் தொழிலார்களை ஏமாற்றும் நோக்கில் அரசு சார்பாக தமிழ் முற்போக்கு கூட்டணியால் முன்வைக்கப்பட்ட தனியார் துறை ஒதுக்கீட்டின் கீழான 2 ஆயிரத்து 500 ரூபா (மாதாந்தம்) மற்றும் கடந்த கூட்டு ஒப்பந்தத்தில் நீக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுக்கு பதிலாக 50 ரூபா (நாளாந்தம்) இடைக்கால கொடுப்பனவுகளை கம்பனிகள் கடுமையாக எதிர்த்து நின்றன.

பலசுற்றுப் பேச்சு பின்னர் இடைக்கால கொடுப்பனவான 2 ஆயிரத்து 500 ரூபாவை மட்டும் வழங்கக் கம்பனிகள் சம்மதம் தெரிவித்திருந்தன. அந்த 2 ஆயிரத்து 500 ரூபா கூட முறையாக தொழிலாளர்களை சென்றடைந்திருக்கவில்லை. அதேபோல் 50 ரூபா கொடுப்பனவு வழங்க 2019ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டது. ஆனால் அதைக் கம்பனிகள் ஏற்றுக் கொள்ள முற்றாக மறுத்துவிட்டன. இந்த நிலையில் பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டும் அது பயனளிக்கவில்லை. இவ்வாறு நல்லாட்சி அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக தோட்டத் தொழிலாளர்களை நம்ப வைத்து ஏமாற்றியிருக்கும் நிலையில் இப்போது ஆட்சிப் பீடம் ஏறியுள்ள புதிய அரசு, தாம் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுத் தருவேன் என்று வாக்குறுதி அளித்துள்ளது. இதன்படியே மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபா வழங்க அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### சந்தேகம்

இந்த அரசு வாக்குறுதி வழங்கியது போன்று தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது. ஆனால் அந்த தீர்மானத்தின் அடிப்படையிலான 1000 ரூபாய் நாள் சம்பளத்தை எவ்வாறு தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கச் செய்வோம் என்பதை அரசு இதுவரை தெளிவுபடுத்தாமல் இருப்பது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளது. இதுவரை காலமும் கூட்டு ஒப்பந்தமே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை தீர்மானிக்கிறது. அப்படி ஒரு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போது அதற்கு மாறாக எவ்வாறு 1000 ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முடியும்?. "ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் வழங்க தேயிலை சபை ஊடாக பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படும். கூட்டு ஒப்பந்தத்திற்கும், ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கும் இடையில் தொடர்பு இல்லை" என்று அரசு சார்பில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் அறிவித்திருந்தார்.

### அரசியல் நாடகம்

ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பில் இதுவரை அரசுக்கும் கம்பனிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எவையும் எட்டப்படவில்லை. அப்படியிருக்கும் போது "கம்பனிகள் கொள்கை அளவில் இணங்கியுள்ளன நிச்சயம் மார்ச் மாதம் 1000 ரூபா வழங்கப்படும் என்று பெப்ரவரி 5ஆம் திகதி நாடாளுமன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இந்தநிலையில் பெப்ரவரி 15ஆம் திகதி ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பில் "கம்பனிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசுக்கு இடையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது என்றும் அது பின்னர் ஒத்திவைக்கப்பட்டது" எனவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்திருந்தார். இது கடந்த ஆட்சியில் நடந்தது போன்ற அரசியல் நாடகத்தை இந்த அரசும் தொடரப் போகின்றதா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கின்றது. கூட்டு ஒப்பந்தத்துக்கும் அரசு வழங்கும் ஆயிரம் தொடர்பில்லை என்று கூறியவர்கள் இப்போது இருதரப்பு இணக்கப்பாடு எட்டப்படாத சந்தர்ப்பத்தில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடவிருந்தோம், அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பது தொழிலாளர்களை நம்ப வைத்து அவர்களது தலையில் சம்பல் அரைக்கும் கைங்கரியமேயாகும்.

### பொறுத்திருந்து பார்ப்போம்

கம்பனிகள் அரசின் முடிவுக்கு ஒத்துக் கொண்டால் ஏனைய விடயங்கள் அரசுக்கு தடையாகாது. ஆனால் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் சம்பளம் கொடுப்பதாயின் அங்கே பல சந்தேகங்கள் எழும். அப்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகாமல் சம்பளம் வழங்க கம்பனிகள் சம்மதித்து விட்டால் அரசாங்கம் தேயிலை சபை ஊடாக சம்பளத்தை வழங்குமா? அல்லது கம்பனிகளுக்கு நிதியளித்து வழங்குமா?. அது ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளமாக அமையுமா? போன்றன பெரும் கேள்விக்குறிகளாகவே காணப்படுகின்றன. கூட்டு ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுமானால் அது தொடர்ந்து நீடிக்குமா என்பதும் சந்தேகமாகவே இருக்கிறது.

இவற்றுக்குரிய ஒரே தீர்வு ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை நீண்ட காலம் வழங்கும் வகையில் புதிய சம்பள முறைமையை உருவாக்குவதேயாகும். அதுவும் உடனடியாக சாத்தியமற்றது. எனவே அதுவரை கடந்த ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தை புதுப்பித்து அதனூடாக ஆயிரம் ரூபாவை அடிப்படை சம்பளமாக நிர்ணயித்து மீளக்கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட அரசு நடவடிக்கை எடுக்குமானால் அது ஒப்பந்தக்காலம் நிறைவு பெறும் வரையில் நம்பத்தகுந்ததாக அமையும். அதற்குரிய நடவடிக்கைகளை தாம் முன்னெடுப்பதாகவே அரசும் காட்டிக்கொள்கிறது. ஆனால் இவற்றில் எது நடக்கும் என்பதையும் ஆயிரம் ரூபா வழங்கப்படுமா? வழங்கப்படாதா? என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

> "2 ஆயிரத்து 500 ரூபா கூட முறையாக தொழிலாளர்களை சென்றடைந்திருக்கவில்லை. அதேபோல் 50 ரூபா கொடுப்பனவு வழங்க 2019ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டது"

# தேவையெனின் விலகுகின்றோம் புதிய கட்சிகளை உருவாக்காதீர்!

## மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கூறுகின்றார்

**வவுனியா, பெப். 27**

**“தேர்தலில் போட்டியிட விரும்பினால் நாங்கள் விலகிக்கொள்கின்றோம். அதற்காக தற்போதைய நிலைமையில் புதிய கட்சிகளை உருவாக்குவது எமக்கு ஆபத்தானது” என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.**

வவுனியா கோவில்குளம் கண்ணன் கோவில் அலங்கார நுழைவாயிலின் திறப்பு விழாவில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தமுறை தேர்தலை இலக்காகக் கொண்டு இந்துக்கள் சார்பாக ஒரு அணியும், கிறிஸ்தவர்கள் சார்பாக மற்றோர் அணியும் உருவெடுத்திருக்கிறது. நாங்கள் ஏற்கனவே தமிழ் பேசும் மக்களாக இருந்து மதத்தால் பிரிந்திருக்கிறோம்.

இன்னுமொரு மதத்தாலும் பிரிவோமேயானால் இந்த நாட்டில் இரண்டாவது இனமாக அல்ல நான்காவது, ஐந்தாவது இனமாக இந்துக்களும், தமிழர்களும் வந்துவிடுவோம்.

ஆபத்தை உணர்ந்தவர்களாக நாம் மாத்திரம் அல்ல அரசியல் கட்சிகளும் செயற்படவேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு உறவினர்களுக்குள்ளே பிரிவுகள் ஏற்பட்டு பல கட்சிகள் உருவாகின்ற நிலைமை காணப்படுகின்றது. இத்தகைய வேலைகளில் ஈடுபடாதீர்கள்.



நீங்கள் தேர்தலில் ஈடுபடப்போகின்றீர்களானால் கூறுங்கள், நாங்கள் விலகிக்கொள்கின்றோம். ஆனால் புதிது புதிதாகக் கட்சிகளை உருவாக்கி மக்களைப் பிரித்து எமது இனத்தை சிறு கூறுகளாக்கி விடாதீர்கள். ஏற்கனவே பௌத்த, சிங்கள வாக்குகளை நம்பி ஒரு ஜனாதிபதி வந்திருக்கிறார். அவர் சிறுபான்மை இனத்தைப் பற்றிச் சிந்திப்பதாக இல்லை.

இவ்வாறான நிலையில் நாங்கள் மத ரீதியாகப் பிளவுபடும்போது பௌத்த, சிங்களம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எடுத்தால் நாங்கள் இங்கு வாழ்வதாக இல்லை என்கின்ற மிகப்பெரிய ஐயப்பாடு உருவாகும்.

ஆகவே, புதிதாக உருவாகின்ற கட்சிகளும், அதை உருவாக்குபவர்களும் தற்போதுள்ள காலத்தை உணர்ந்து மீண்டும் ஒருமுறை சிந்தித்துச் செயற்படுங்கள். - என்றார். (த-110)



# திருநீற்றுப்புதன் திருச் சடங்கு

மன்னார்,பெப்.27

‘மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மீண்டும் மண்ணுக்குத் திரும்புவாய்’ என்று விசுவாசிகளின் நெற்றியில் சாம்பல் பூசிய நிகழ்வு மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி எஸ்.கே.தேவராஜா அடிகளார் தலைமையில் திருச்சடங்கு நடைபெற்றது. இறையேசுவின் பாடு, மரணம் மற்றும் அவரின் உயிர்ப்பைச் சிந்தித்து நாற்பது நாள்கள் செபம்,தவம், தானம் போன்ற செயல்களில் கத்தோலிக்க மக்கள் நிலைக்கவும், அருளின் காலம், இரக்கத்தின் காலம், மன்னிப்பின் காலம், கடவுள் எம்மைத் தேடி நம்மை மீட்கும் காலத்தைச் சிந்தித்து மனம் மாற்றம் கொள்ளும் காலத்தின் தொடக்கமாக இன்று கொண்டாடப்பட்டது. (க-60)

# சைக்கிள்கள் அன்பளிப்பு

வவுனியாவில் பெண்தலைமைத்துவக் குடும்பத்தின் வசதியற்ற மாணவர்கள் இருவருக்கு, சைக்கிள்கள் தமிழ் விருட்சம் அமைப்பினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்ற, துவாரகா ஹன்சிகாவின் நிதிப்பங்களிப்பில் கோவில்குளம் இந்துக்கல்லூரியில் தரம் ஆறு மற்றும் செக்கட்டிப்பிலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் பெண்தலைமைத்துவக் குடும்பத்தின் மாணவிகள் இருவருக்கு பாடசாலை செல்வதற்கு சைக்கிள்கள் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் வழங்கப்பட்டன. (ந)

# சிறுவனுக்கு உதவி

முல்லைத்தீவு,பெப்.27

ஜீவஊற்று அன்பின் கரத்தின் ஊடாக, முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பத்தில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு உதவி வழங்கப்பட்டது.

சிறுவனுக்கு உடனடித் தேவையான கட்டிலும், மெத்தையும் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை லண்டன் காக்கும் கரங்கள் ஸ்தாபகர் அன்ரன் யூதாகரன் வெனிற்றா றோகினி வழங்கினார். (க-222)

## விதிமுறைகளை மீறிய

# நான்கு வர்த்தகர்களுக்கு ரூபா 36 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,பெப்.27

சுகாதார விதிமுறைகளை மீறி உணவு விற்பனை மற்றும் விநியோகத்தில் ஈடுபட்ட நான்கு வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றில் 36 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவ சான்றிதழ் இன்றி உணவு கையாண்டமை, சூடான உணவுப் பொருள்களை பொலித்தீனுடன் வைத்தமை, ஈ மற்றும் தூசுகளால் மாசுபடக்கூடியவாறு சமையலறையைப் பேணியமை, மற்றும் நேரடி வெயிலின் தாக்கமுறக்கூடியவாறு பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட மென்பானங்களை விநியோகிக்க கொண்டு சென்றமை உட்பட பன்னிரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக 4 வர்த்தகர்களுக்கு எதிராக பருத்தித்துறை பிரிவு II பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்டினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றங்களை வர்த்தகர்கள் ஒப்புக்கொண்டமையின் அடிப்படையில் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# 5 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்



கிளிநொச்சி,பெப்.27

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு நலிவுற்ற நிலையில் வாழும் 5 குடும்பங்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் வைத்து உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவர் முரசுமோட்டையில் வசிக்கும் கிளிநொச்சி மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் தி.கிருஷ்ணரூபன் ஊடாக உதவிப் பொருள்களை வழங்கினார். (க-222)

# வீதியின் நடுவே டிப்பர்; போக்குவரத்து பாதிப்பு

வவுனியா,பெப்.27

வவுனியா ரயில் நிலைய வீதியின் நடுவே டிப்பர் வாகனம் ஒன்று தரித்து நின்றமையால் அவ் வீதியின் ஊடான போக்குவரத்து சுமார் 20 நிமிடங்கள் பாதிப்படைந்தது.



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

குருமன்காடு பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி ரயில் நிலைய வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனம் இயந்திரக் கோளாறு காரணமாக

கதிரேசு வீதியின் நடுவே நின்றது. இதன் காரணமாக இந்த வீதியூடான போக்குவரத்து சுமார் 20 நிமிடங்களுக்கு மேல் ஸ்தம்பிதம் அடைந்தது.

மாலை நேரங்களில் இந்த வீதியூடாக அதிகளவு வாகனங்கள் பயணிக்கின்றமையால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதன் பின்னர் பொதுமக்களின் உதவியுடன் டிப்பர் வாகனம் வீதியின் கரைக்கு கொண்டு செல்லப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ஐ-18)

## நிர்வாக சபைத் தெரிவு

ஏழாலை,பெப்.27

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி படிப்பகம் மற்றும் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு சுமார் 30 வருடங்களின் பின்னர் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி மயிலிட்டித்துறை வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்மன் ஆலய மண்டபத்தில் இந்த நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

இதில் தலைவர் அம்பிகைபாகன் அருணேஸ்வரன், செயலாளர் அருளானந்தம் வரதராஜ், பொருளாளர் நற்குணம் அருள்குமார்,உபதலைவர் செல்லச்சாமி சிவசுப்பிரமணியம், உபசெயலாளர் நடராஜா சிவனேசன், கணக்காய்வாளர் மார்க்கண்டு தங்கேஸ்வரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.கேமலதன், க. சதீஷ் ,ந. நாகபாதம், ஐ.சுவர்ணா,ர. ரஞ்சனா தேவி, ஜெ. மலர்விழி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்களாக வி. இரத்தினராசா, மோ. யோகானந்தம், பொ. ரஞ்சனதேவர் ஆகியோரும் ஆலோசகர்களாக நா. வடிவேஸ்வரம்,நா.ஜெகதீஸ்வரன், மு.கருணாகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-39)

## கற்றாழை கடத்தியவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம். பெப்.27

கற்றாழையுடன் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணை சாட்டிச் சந்தியில் வைத்து 500 கிலோ கற்றாழையுடன் முஸ்லிம் நபர் ஒருவரை மண்டைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தன் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ - ந)

## வாழ்வாதார உதவி



கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

இதற்கான நிதி உதவியை ஜீவஊற்று அன்பின்கரம் அமைப்பின் ஊடாக லண்டன் காக்கும் கரங்கள் அமைப்பின் நிறுவுநர் அன்ரன் யூதாகரன் வெனிற்றா றோகினி வழங்கியிருந்தார். (ஐ-222)




# சர்வதேச விசாரணையை வலியுறுத்திப் போராட்டம்

### மன்னார் உறவுகள் நடத்தினர்

**மன்னார், பெப். 27**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் மன்னார் உறவுகள், சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட உறவுகள் மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக ஒன்றுகூடி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பின்னர் பேரணியாக மன்னார் சதொச மனிதப்புதைகுழி வரை சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

"சதொச புதைகுழிக்குள் இருப்பவர்கள் யார்?, இவர்களை புதைத்தது யார்?, மன்னார் மனித புதைகுழிக்கான நீதிமன்ற வழக்கைத் துரிதப்படுத்த வேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு கூடியிருந்தவர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர்: "இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்து விட்டனர் என்று கூறும் அரசு, எங்களுடைய கைகளால் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கூறவேண்டும். சுமார் பத்து வருடங்களைக் கடந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் களைத்து விட்டோம். பல தாய் தந்தையர்கள் இறந்தும் விட்டார்கள். இன்னும் எமக்கான நீதி கிடைக்கவில்லை.

எமக்கு இலங்கை அரசின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை. எனவே சர்வதேசம் உடனடியாகத் தலையிட்டு நீதியான விசாரணை நடத்தி எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்.

மன்னார் நகரப்பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய மனிதப் புதைகுழி பற்றி எந்தவோர் உண்மைத் தன்மைகளையும் உத்தியோக பூர்வமாக எமக்கோ பொதுமக்களுக்கோ இன்னும் தெரிவிக்கவில்லை.

அத்துடன் நீதிமன்றில் மனித எச்சங்கள் வைக்கப்பட்டிருந்த கதவு உடைக்கப்பட்டன என்று ஊடகங்களில் செய்தி வெளியாகின. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

சதொச மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் பற்றிய உண்மைத்தன்மையையும் எமக்கு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறான நிலையில், கால நீடிப்பு என்னும் பெயரில் இழுத்தடிப்புச் செய்யாமல் சர்வதேசம் உடனடியாக விசாரணை நடத்தி காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கூறவேண்டும். உயிருடன் இருந்தால் எம்மிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டனர்.

போராட்டத்தில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் ஞானப்பிரகாசம் அடிகள், பங்குத்தந்தையர், அருட்சகோதரிகள் ஆகியோரும் பங்கேற்றனர். (த-213-56)

# ராஜபக்ஷக்களின் முடிவால் இலங்கைக்கு பேராபத்து

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 27

"அரசின் தான்தோன்றித்தனமான முடிவால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை பேராபத்தைச் சந்திக்கவுள்ளது. இதற்கு ராஜபக்ஷ குடும்பமே முழுப் பொறுப்பு." என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை மீதான ஐ.நா. தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகினால் அதற்கு எதிராக உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வரும் விமர்சனங்களை நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்று ராஜபக்ஷ அரசு கருதுகின்றது. ஆனால், ஐ.நா. தீர்மானங்களிலிருந்து இந்த அரசு விலகும் முடிவு நாட்டுக்கு சர்வதேச அரங்கில் பேராபத்தையே ஏற்படுத்தவுள்ளது.

**தேசத் துரோக செயற்பாடு**

2009ஆம் ஆண்டு மே மாதம் போர் நிறைவடைந்து 5 நாள்களுக்குள் நாட்டின் உள்ளகப் பிரச்சினையை மஹிந்த ராஜபக்ஷ வே சர்வதேசத்திடம் கொண்டு சென்றார். இதனைத் தேசத் துரோகச் செயற்பாடாகவே கருத வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் பான் கீ மூனுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் செய்து கொண்ட கூட்டறிக்கையின் பிரகாரமே 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை மீது 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் மிகவும் கனதியாக இருந்தன. ஆனால், 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசு வந்த பின்னர் 30/01 தீர்மானமும் அதற்குப் பின்னர் 40/01 தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. இந்த இரண்டு தீர்மானங்களுக்கும் நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியமையாலேயே அவற்றின் கனதி குறைந்தது. அதனாலேயே, மின்சாரக் கதிரையிலிருந்து ராஜபக்ஷ குடும்பத்தினர் காப்பாற்றப்பட்டனர். எனவே, நல்லாட்சி அரசை தேசத் துரோகிகள் என்று ராஜபக்ஷ அணியினர் விமர்சிக்கவே முடியாது.

உள்நாட்டுப் பிரச்சினையைச் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.நா. தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகி நாட்டுக்குப் பேராபத்தை ஏற்படுத்தவுள்ள கோத்தாபய ராஜபக்ஷவுமே தேசத்துரோகிகள்" - என்றார். (அ- த-22)

# நூறு நாள்களில் சுருண்டது அரசு!

## பலமான அரசு அமைப்போம் என்கின்றது சஜித் அணி

கொழும்பு, பெப்.27

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் பலவீனத்தன்மை 100 நாள்களுக்குள் வெளிப்பட்டுள்ளது. இந்தநிலையில் அடிப்படைவாதம், இனவாதம் அற்ற விதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பலமான கூட்டணியை ஆரம்பித்துள்ளோம். இந்தக் கூட்டணியின் ஊடாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் போட்டியிட்டு பலமான அரசை நிச்சயம் அமைப்பார்கள்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் புதிய கூட்டணியில் போட்டியிடாமல்தனித்து 'யானை' சின்னத்தில் போட்டியிடுவார்கள் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அந்தச் செய்திகள் தவறானவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மா னத்துக்கும் கட்சிக் கொள்கைக்கும் முரணான வகையில் எவரும் செயற்படக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு புதிய கூட்டணியின் தலைவர் பதவியும், வேட்புமனுத் தாக்கல் குழுவின் தலைவர் பதவியும் வழங்கப்பட்டுள்ளன. பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் அனுமதியும். அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்கள் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய கூட்டணியின் ஊடாகவே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவார்கள்.

ராஜபக்ஷ அரசின் சதி வலைக்குள் நாம் எவரும் சிக்கமாட்டோம். சஜித் தலைமையில் பலமான அரசை நிச்சயம் அமைப்போம்-என்றார். (எ-22)

## மாற்றுத் திறனாளிகளுக்கு இரு நாள்கள் செயலமர்வு



கிளிநொச்சி,பெப்.27

ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனங்களில் ஒன்றாகிய சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான இருநாள் செயலமர்வுகள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் அண்மையில் நடத்தப்பட்டன. மாற்றுத்திறனாளிகள் தலா 30 பேர் வீதம் செயலமர்வுகளில் பங்குபற்றினர். முதலாம் நாள் செயலமர்வு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடும் மாற்றுத் திறனாளிகளுக்கும் . இரண்டா ம் நாள் செயலமர்வு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்பும் மாற்றுத் திற னாளிகளுக்கும் நடத்தப்பட்டது. (க-222).

## புதிய செயலாளர் பிரிவை உருவாக்க மக்கள் கருத்து

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, பெப். 27

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை புதிய பிரதேச செயலாளர் பிரிவுக்குள் உள்ளடக்க வேண்டிய புதிய கிராமங்கள் தொடர்பில் மக்களின் கருத்தறிவத்ற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் புதிய பிரதேச செயலாளர் பிரிவாக ஓமந்தையை உருவாக்க, வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 11 கிராம அலுவலர் பிரிவுகளையும், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 4 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக புதிய பிரதேச செயலாளர் பிரிவை உருவாக்க முயற்சிக்கப்பட்டது. எனினும், வவுனியா வடக்கில் இருந்து 4 கிராம அலுவலர் பிரிவை ஓமந்தையுடன் இணைத்தால் வவுனியா வடக்கில் உள்ள தமிழர்களின் பரம்பல் குறைவடையும். இதனால் வவுனியா வடக்கு சிங்கள மயமாகும் ஆபத்து இருப்பதாக கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்பிரகாரம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் எடுக்கும் முடிவு கைவிடப்பட்டது.

அதன்படி 15 கிராம அலுவலர் பிரிவுகளையும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் இருந்தே எடுப்பதற்கான புதிய வரைபடம், அதற்கான புள்ளிவிவரங்கள் மாவட்டச் செயலகத்தால் 4 வகைகளில் தயாரிக்கப்பட்டிருந்தன.

இவற்றில் எவற்றை இணைப்பது என்பது தொடர்பில் மக்கள் கருத்தறிவது என்று தீர்மானிக்கப்பட்டது. (த-105)

## வீதி விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி,பெப்.27

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் சென்ற சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த முதியவர் காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் கொடிகாமம் நகரப் பகுதியில் இடம்பெற்றது.

கொடிகாமம் சந்தை வீதியைச்சேர்ந்த தில்லையம்பலம் மகேஸ்வரன் (வயது 67) என்ற முதியவரே காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞர் சிறு காயங்களுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## இழுவை மடிச் சட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு மனு

### வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், பெப். 27

நாட்டில் நிறைவேற்றப்பட்ட இழுவை மடி தடைச் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தக்கோரி வடக்கின் நான்கு மாவட்டங்களின் மீனவ சங்கப் பிரதிநிதிகள் இணைந்து கொழும்பு உயர் நீதிமன்றில் அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இழுவை மடி தடைச் சட்டத்தைக் கொண்டு வருமாறு நாம் பல போராட்டங்களையும் அழுத்தங்களையும் பிரயோகித்து அதன் பயனாக நாடாளுமன்றில் இழுவை மடி தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும், குறித்த சட்டம் கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் உள்ளூரிலும் சரி இந்தியாவிலிருந்துவரும் இழுவைமடிகளையும் கூட கட்டுப்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து வருகை தரும் மீனவர்களின் எல்லை மீறல்கள் சமீபகாலமாக குறைந்திருந்த நிலையில் மீண்டும் அதிகரித்து வருகின்ற தன்மை காணப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து எல்லைதாண்டி வரும் மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி எமது வளங்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். நவீன கருவிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மீன்வளம் குறைந்துகொண்டு செல்கின்றது.

எமது மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அமைச்சரோ மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கரிசனையும் காட்டினர்என்பது அறியமுடிய வில்லை. எனவே நடைபெறவுள்ள தேர்தலில் நாம் சிந்தித்துச் செயற்படுவது என்று தீர்மானிந்துள்ளோம்.

எமது பிரச்சினைகள் எமது அவலங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இழுவை மடிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாத நிலைமையே காணப்படுகின்றது. என்றார். (த-20)

## பெருந்திருவிழா

கொழும்புத்துறை,பெப்.27

கொழும்புத்துறை உப்புக்குளம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

திருவிழா தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாசி மகம் அன்று தீர்த்த திருவிழாவும் நடைபெறும்.

9ஆம் திகதி திங்கட்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும், பிற்பகல் 3 மணிக்கு வைரவர் உற்சவமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# அரசுக்கு எதிராகவே பரப்புரை செய்வோம்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, பெப். 27

வடக்கு, கிழக்கில் அரச முகவர்கள், சிறுகட்சிகள், குழுக்கள் என நாற்பது கட்சிகள் போட்டியிடுகின்றன. இவை அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வசைபாடப் போகின்றன. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரியான அரசுக்கு எதிராகவே பரப்புரை முன்னெடுக்கப்போகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

கல்மடு வட்டார இணைப்பாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு கல்மடுவட்டார பிரதேச சபை உறுப்பினர் ச.ஜீவராசா தலைமையில் அங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெற்ற இக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ,பச்சிலைப்பள்ளி தவிசாளர் சுரேன் ,பிரதேச சபை உறுப்பினர்களான சிவமோகன் ,வீரபாகுதேவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செய்திருக்கின்றோம். அபிவிருத்தியை மட்டும் நாம் பார்க்கமுடியாது காணாமற் போனவர்களின் பிரச்சினை, காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, நிரந்தர அரசியல் தீர்வு என அனைத்து விடயங்களையும் சம நேரத்தில் கையாண்டு வருகின்றோம். இலங்கை ஐ.நா. தீர்மானத்திருந்து விலகுவதாக அறிவிக்கப் போகிறது. இலங்கை அரசு காலங்காலமாக தீர்மானங்களில் கைச்சாத்திடுவதும் கிழிப்பதுமாகவே உள்ளது.

இந்தக் கூட்டத்தொடரை தொடர்ந்து நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. காணாமற் போனவர்களுக்கு பின்னின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு எதிராக அழுத்தம் கொடுப்பதாகவும் இராணுவத் தளபதிக்கு அமெரிக்கா தடை விதித்தமை போன்றவற்றைக் காரணம்காட்டி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு கட்சியாக அறுதிப் பெரும்பான்மை பெற சிங்கள அரசு பரப்புரை செய்ய ஆரம்பித்துள்ளது. ஆனால், இந்தத் தேர்தலில் கட்டாயம் இருபது ஆசனங்களைக் கூட்டமைப்பு பெற்றால் மட்டுமே வலுவான சக்தியாக இருக்க முடியும். ஆகவே எதிர்வரும் தேர்தலில் அனைவரும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். என்றார்.

இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்துள்ள அபிவிருத்திகள் பற்றி ஆராயப்பட்டன. மேலும் செய்யப்படவேண்டிய அபிவிருத்திகள், பிரதேசத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. (கு-35)

# மாயமாகும் கால்நடைகள்

முல்லைத்தீவு, பெப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகள் காணாமற்போகின்றன. இதைத் தடுக்க கால்நடைகளைக் கொள்வனவு செய்வோர் உரிய பதிவுகள் மற்றும் அனுமதியுடன் கொண்டுசெல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

கால்நடைகளுக்கு நோய்களும் ஏற்படுகின்றன. இதனால் அவை இறந்துவிட்டனவா அல்லது கடத்தப்படுகின்றனவா என்று கண்டறியவேண்டியுள்ளது. எனவே பதிவு ஆவணங்களுடன் கொள்வனவு செய்யுங்கள். விற்பனையாளர்களும் அவற்றை உரிய ஆவணங்களுடன் விற்பனை செய்யவேண்டும் என்று கால்நடையாளர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (கு-500)

# யானையைப் பிடிக்கும் ரணிலையே பிடிக்காது

## என்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, பெப்.27

**பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியின் கீழ் தான் போட்டியிடுவேன். எனக்கு வேட்புமனு வழங்குவது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி முடிவெடுக்கமுடியாது என்று பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

சரத்பொன்சேகா, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கு வேட்பு மனு வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என ரணில் ஆதரவு அணியிலிருந்து முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே பொன்சேகா நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுத் தேர்தலில் தேசிய ஐக்கிய சக்தி எனும் அரசியல் கூட்டணியின்கீழ்தான் போட்டியிடுவேன். வேட்புமனு தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் அந்தக் கூட்டணிக்கே இருக்கின்றது. எனக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியால் எந்தவொரு அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது.

எந்த சின்னத்தின் கீழ் போட்டியிட்டாலும் எமது கூட்டணி வெற்றி நடைபோடும். ஐக்கிய தேசியக்கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தையும் அதன் பொறிமுறையையும் கட்சி ஆதரவாளர்கள் விரும்பாததால் யானை சின்னத்தில் போட்டியிடுவதில் சிக்கல் உள்ளது. அதனால் அன்னம்தான் இலக்காக இருக்கின்றது. கட்சி ஆதரவாளர்கள் யானைச் சின்னத்தை வெறுக்கவில்லை. தலைமைத்துவம் மீதே அதிருப்தியில் உள்ளனர்.

அதேவேளை சர்வதேசத்துடன் முரண்படும் கொள்கையையே அரசு மீண்டும் கடைபிடிக்கின்றது. அதனால் ஜீ.எஸ்.பி ஸ்ரீ.பிளஸ் வரிச் சலுகை இல்லாமல் போகலாம். - என்றார். (எ-44)

# பொதுத் தேர்தலில் புறா அசாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

எதிர்வரும் பொதுத் தேர்தலில் புறாச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி நாடு முழுதும் புறா சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. கேகாலை உட்பட 3 மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்கள் எமது கட்சியில் போட்டியிட இருக்கின்றனர். எமது கட்சி ஐக்கிய தேசிய முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றது. என்றாலும் ஐக்கிய தேசிய கட்சி தனக்குள் இருக்கும் பிரச்சினையை இன்னும் தீர்த்துக் கொள்ளத் தவறி இருக்கின்றது. சின்னம் தொடர்பான பிரச்சினைக்கு இன்னும் முடிவில்லாமல் இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை இழுத்துக்கொண்டு செல்வதே ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்களின் திட்டமாகும்.

அரசு ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் கடந்தும் மக்கள் எதிர்பார்த்த எந்த வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. அதனால் ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வாக்குகள் பொதுத் தேர்தலில் கிடைக்குமா என்ற சந்தேகம் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை தொடர்ந்து இழுத்துக்கொண்டு செல்லும் கொந்தராத்தை ரணில் விக்கிரமசிங்க அணியினர் மேற்கொண்டு, தேர்தலில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொடுக்க செயற்பட்டு வருகின்றனர்.

அதனால் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருக்கும் சின்னம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு தற்போதைக்கு கிடைக்கப்போவதில்லை. அதனால் நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறி தனித்து போட்டியிட தீர்மானித்திருக்கின்றோம்.

பொதுத் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றோம். எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாட இருக்கின்றோம்." - என்றார். (எ)

# மின்தடை

யாழ்ப்பாணம்.பெப்.27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை வெள்ளிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** கொழும்புத்துறை வீதி, ஏ.வி வீதி, துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன் தோட்டம், உதயபுரம் ஆகிய இடங்களிலும் - **வவுனியா மாவட்டதில்** சாம்பல்தோட்டம், சூடுவெந்தபுலவு கிராமம், இலுப்பைக்குளம் ஆகிய இடங்களிலும் - **மன்னார் மாவட்டத்தில்** தலைமன்னார் கிராமம், தலைமன்னார் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# தனியாரிடம் இருந்து மின்சாரக் கொள்வனவு

கொழும்பு, பெப்.27

தற்போது நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலையை அடுத்து மின்சார வழங்கலைத் தடையின்றி மேற்கொள்ளத் தனியார் நிறுவனத்திடம் இருந்து 128 மெகா வோட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு மின்சக்தி மற்றும் சக்தி வள அமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதற்காக அமைச்சர் மஹிந்த சமரவீர சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. இது தொடர்பாக மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரான சுலக்ஸன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (எ)

# தேர்தலில் தோல்வியுற்றால் தேசியப் பட்டியல் கிடையாது

## மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, பெப்.27



**பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மண்கவ்வியவர்களுக்கு, தேசியப் பட்டியலில் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இடமளிக்காது என்று அந்தக் கட்சியின் தலைவரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மார்ச் 12 இயக்கத்தின் உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தூய்மையான அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பும் நோக்கிலேயே தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக மார்ச் 12 இயக்கம் உருவாக்கப்பட்டது. விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு மேற்படி அமைப்பு உதவி கோரத் திட்டமிட்டுள்ளது.

அதன் ஓர் அங்கமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, மார்ச் 12 இயக்கத்தினர் பிரதமரின் அதிகார பூர்வ வதிவிடத்தில் வைத்து நேற்றுமுன்தினம் முற்பகல் சந்தித்தனர்.


இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட மார்ச் - 12 இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தலில் தகுதியான வேட்பாளர்களுக்கு வேட்பு மனு வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தோம். சட்டவாக்கம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் அவர்களுக்கு தெளிவிருக்க வேண்டும். அதனாலேயே தகுதியான வேட்பாளர்களை நிறுத்துமாறு கோரப்பட்டது.

தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு, தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு வாய்ப்பளிக்க வேண்டாம் எனவும் கோரினோம். இளைஞர் மற்றும் பெண் நாடாளுமன்ற பிரதிநித்துவம் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

இவற்றுக்குப் பதிலளித்த பிரதமர், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்றும், தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியல் நியமனம் தனது தலைமையின் கீழான கட்சியில் வழங்கப்படாது எனவும் உறுதியளித்தார் - என்றார்.

(எ-44,22)



# விமான, கடற்படைகளும் கொழும்பு வீதிகளில்!

கொழும்பு, பெப்.27

கொழும்பில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த இராணுத்தினருக்கு மேலதிகமாக கடற்படையினரின் பொலிஸார் மற்றும் விமானப் படையினரின் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலைக் கையாள இராணுவத்தினர் (மிலிட்டரி பொலிஸ்) கடந்த 24ஆம் திகதி முதல் முக்கியமான வீதிகளில் நிறுத்தப்பட்டனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் இந்தத் திட்டத்தை செயற்படுத்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவுறுத்தியிருந்தார்.

காலை மற்றும் பிற்பகலில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு உதவவென இந்த இராணுவ பொலிஸ் படைப் பிரிவு நிறுத்தப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பணிகளில் இராணுவ பொலிஸார் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முதல் போக்குவரத்து பொலிஸாருடன் இணைந்து முப்படையினரின் பொலிஸாரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# மாணவர்களை மையமாக கொண்ட கல்வி முறைமை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

பாடங்களை மனனம் செய்து பரீட்சைக்கு முகம் கொடுக்கும் கல்வி முறைமைக்குப் பதிலாக மாணவர்களை மையமாகக் கொண்ட புதிய கல்வி முறைமை ஒன்று மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

காலி லபதுவ சிரிதம்ம கல்லூரியின் 25 ஆவது வருட விழாவில் கடந்த திங்கட்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய பாதுகாப்புக்கு அடுத்தபடியாக கல்வித் துறைக்கு முக்கியத்துவம் செலுத்தும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் மாற்றம் காணாத புதிய கல்வி கொள்கையொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். வரலாற்றுத் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதை விடுத்து எதிர்கால நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

நாட்டில் உள்ள 373 தேசிய பாடசாலைகளில் 274 பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை. நாட்டின் கல்வித் துறையில் முன்னெடுக்க வேண்டியுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அனைத்து சவால்களுக்கும் முகங்கொடுக்க நான் தயாராகவே உள்ளேன்.

நாட்டின் கல்வி கட்டமைப்பில் இணையவிருக்கும் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக மாற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதியின் திட்டமாகும். இதன்படி அனைத்து கல்வியியற் கல்லூரிகளையும் கல்வியியற் பட்டம் வழங்கும் நிறுவனமாக மாற்றியமைக்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் கல்வியியற் கல்லூரிகளில் இணையவுள்ள போதனா கல்வி மாணவர்கள் டிப்ளோமாதாரிகளாக அன்றி கல்வியியற் பட்டதாரிகளாக வெளியேறுவார்கள். 373 ஆக காணப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஆயிரமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்- என்றார்.

(எ)

# மலர் வெளியீடும் பரிசில் வழங்கலும்

வடமராட்சி,பெப்.27

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாந்தம் நடத்தப்படும், ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய வாசகர்களுக்கான பரிசில்கள் வழங்கலும், 266 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

ஞானச்சுடர் வெளியீட்டு உரையை இளைப்பாறிய ஆசிரியை புனிதவதி சண்முகலிங்கம் மற்றும் மதிப்புரையை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்துவர்.

அதனைத்தொடர்ந்து வாசகர் போட்டிக்கான பரிசில்களும் வழங்கப்படும். இவர்களில் முதலாம் பரிசை தயாநிதி பாலசுந்தரம், இரண்டாம் பரிசை கே.சாம்பவி, மூன்றாம் பரிசை ஜெயமலர் குகாணந்தன் ஆகியோரும், ஆறுதல் பரிசுகளை வா.நிஷாந்தினி, ந.லக்ஷ்மிநாத், மு.சரஸ்வதி, சபாநேசன் லவ்லி, மதுரை மீனாம்பாள் ஸ்ரீஸ்கந்தராசா, நிர்மலாதேவி பாலசுப்ரமணியம், வத்சன் சத்தியவாணி, வ.செந்தில்நாதன், செ.வசந்தாதேவி மற்றும் ஜயாத்துரை குணரட்ணம் ஆகியோரும் பெற்றுக் கொள்வர். (க)



# கலந்துரையாடல்!!

வவுனியா, பெப்.27

வடக்கு, கிழக்கு ரயில்வே கடவை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு ரயில்வே கடவை காப்பாளர் சங்கத்தினரும், அகில இலங்கை ரயில்வே கடவை காப்பாளர் சங்கத்தினரும் இணைந்து, தங்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்வதுடன், சமயத் தலைவர்கள் ஊடாக அவர்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ரயில்வே திணைக்களத்தில் நிரந்தரமாக ரயில் கடவை ஊழியர்களை உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களால் முன்வைக்கப்பட்டது. (ஜ-110)





# மட்டுவிலில் சிறப்புற்ற மாட்டு வண்டிச் சவாரி

மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மட்டுவில் வண்ணாத்திபாலம் அருகில் உள்ள தம்பிரான் சவாரித்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிசங்கத்தினர் இதைநடத்தினர். இதில் அ,ஆ,இ,ஈ என்று நான்கு பிரிவுகளில் வடக்கின் பல பிரதேசங்களில் இருந்து 43 சோடி மாடுகள் கலந்து போட்டியிட்டிருந்தன. (கு)



மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.எம். தம்பிஐயா நினைவுக் கலையரங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அவரது மகனின் நிதிப் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்த மண்டபம், எம். வாமதேவன் தம்பதியரால் திறந்து வைக்கப்பட்டது. வலிகாமம் கல்வி வலய வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் திருமதி சு.பிரேமலோஜினி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# மைத்திரியை தோற்கடிப்பேன்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க சூளுரை



கொழும்பு, பெப்.27

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நிச்சயம் தோற்கடிப்பேன் என்று இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

'தாமரை மொட்டு' கூட்டணியின் தவிசாளராக மைத்திரிபால நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 15 இலட்ச வாக்குகள்கூட இல்லை. அதுதான் உண்மை. கூடுதல் பட்சம் இரண்டு இலட்சம் வாக்குகள் இருக்கலாம்.

சுதந்திரக் கட்சிக்காரர்கள் எல்லோரும் 'தாமரை மொட்டு'க்கு வந்துவிட்டனர். வெட்கம், மானம் இருந்தால் மைத்திரிபால சிறிசேன தாமரை மொட்டில் போட்டியிடுவாரா என்பதை நாங்கள் யோசிக்க வேண்டும்.

அவருக்குப் பதவி இல்லாமல் இருக்க முடியாது. மக்கள் மீதுள்ள அன்பால் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சுப் பதவிகளை எடுத்துக்கொள்பவர்கள் யார் என்பதை மக்கள் பார்க்க வேண்டும். அவர்களைத் தோற்கடிக்க வேண்டும்.

மீளெழும் பொலனறுவை என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் பெரும் நிதி மோசடி செய்துள்ளார் மைத்திரி. ஆறாயிரத்து முன்னூறு கோடி ரூபாவை இங்கு செலவழித்துள்ளார் எனக் கூறும் அவர் அதில் நாலாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் கொள்ளையடித்துள்ளார். நான் இதனைப் பொறுப்புடன் கூறுகின்றேன். இது குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளேன்-என்றார். (எ-22)

## பட்டமளிப்பு விழாவும் விருது வழங்கலும்

கொழும்பு, பெப்.27

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ்ப் பட்டயக் கற்கை நெறி 2018-2019 பட்டமளிப்பு விழாவும், தமிழ் நிதி விருது வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில்நடைபெறவுள்ளன.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் ஆ.குகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில்பிரதமவிருந்தினராக பேராசிரியர் மா.கருணாநிதி கலந்து கொள்வார். எழுத்தாளர் செபஸ்டியன் அந்தனி ஜீவா "தமிழ்நிதி" விருதைப் பெற்றுக்கொள்வார்.

நிகழ்வில் கௌரவிப்பும், பட்டமளிப்பும், நூல் வெளியீடும் நடைபெறும். (ஐ)

## 'சதொச' புதைகுழி வழக்கில் சட்டத்தரணிகள் முற்படலாமா?

### கட்டளை வரும் 10ஆம் திகதி

தலைமன்னார், பெப். 27

மன்னார் 'சதொச' மனித புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணிகள் மன்றில் முற்பட முடியுமா முடியாதா? என்ற கேள்விக்கான கட்டளை எதிர்வரும் 10ஆம் திகதி வழங்கப்படும் என்று மன்னார் நீதிமன்று நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

இந்த வழக்கு நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரச சட்டத்தரணி சமிந்த விக்கிரமரட்ண, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் கே.எஸ்.ரட்ணவேல், வீ.எஸ்.நிரஞ்சன், திருமதி கே.எம்.றனித்தா ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

இந்த வழக்கு காலையில் அழைக்கப்பட்டபோது நீண்டநேரம் சட்டத்தரணிகளின் வாதாட்டம் நீண்டு கொண்டு சென்றதால், ஏனைய வழக்குகளுக்காக நீதிமன்றுக்கு வந்திருந்தவர்கள் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனால் வழக்கு பிற்பகலில் அழைக்கப்படும் என்று கூறி ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகலில் விசாரணைக்கு வந்தது. அரச சட்டத்தரணி சமிந்த விக்கிரமரட்ண தனது வாதத்தில், வெளிநாடுகளில் இடம்பெற்ற வழக்கு தீர்ப்புக்களை முன்வைத்தார்.

"காபன் பரிசோதனையில் இந்த எலும்புக்கூடுகள் 178 வருடங்களுக்கு மேற்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆகவே இங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் முற்பட முடியாது" என்று தனது வாதத்தை முன்வைத்தார்.

அதைத் தொடர்ந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தனது வாதத்தை முன்வைத்தார்.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீண்ட நாள்களாக வீதியோரத்தில் உறவுகளை ஒப்படைக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதை நீதிமன்றமோ அல்லது அரசோ அலட்சியமாக விடக்கூடாது. இது மனிதாபிமான பிரச்சினை. சட்டப் பிரச்சினையாக மட்டும் கருதக்கூடாது.

எலும்புக் கூடுகளின் காபன் பரிசோதனையை மட்டும் வைத்துக் கொண்டு இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. இதைவிட வேறு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மன்னாரில் 330 பேருக்கு மேல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் கொண்ட பெட்டிகளின் பொறுப்புக்களை சட்ட மருத்துவ நிபுணர் தனது பாதுகாப்பில் வைத்துள்ளார். இவற்றை அவர் ஏன் இதுவரை தனது பாதுகாப்பில் வைத்திருக்கின்றார்? பொலிஸார் ஊடாக நீதிமன்றில் ஒப்படைத்திருக்க முடியும்" போன்ற விடயங்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சார்பில் சட்டத்தரணி முன்வைத்தார்.

அதைத் தொடர்ந்து வழக்கு எழுத்து மூல சமர்ப்பணத்துக்காக எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்து வழக்கு விசாரணை 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-60)

# நெற் செய்கையாளர்களே அட்டவணையை நோக்குக!

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 27

விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கால அட்டவணை மற்றும் திணைக்கள அறிவுறுத்தலைப் பின்பற்றி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தில் தண்ணீர் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுபோகத்துக்கான நீர் வழங்கலாக, 3 அல்லது அதற்கு குறைவான ஏக்கர் பயிர்ச் செய்கைக்கு நூறு வீதம் பயன்படுத்த முடியும்.

36 ஏக்கர் நில பரப்பு உள்ளவர்கள் 3ஏக்கர் வரையும், 68 ஏக்கர் நில பரப்பு உள்ளவர்கள் 4ஏக்கர் வரையும், 810 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளவர்கள் 5 ஏக்கர் வரையும், 1015 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளவர்கள் 6ஏக்கர் வரையும், 1520 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளவர்கள் 7ஏக்கர் வரையும், 2025 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளவர்கள் 8 ஏக்கர் வரையும் தண்ணீரைப் பயன்படுத்த முடியும்.

அத்துமீறிய விதைப்பு, மேலதிக விதைப்புக்கு கடுமையான நடவடிக்கை மற்றும் தண்டப் பணம் அறவிடப்படும். இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை 15 ஆயிரத்து 163 ஏக்கரில் இந்தமுறை மேற்கொள்ள முடியும். விவசாயிகள் பயிர்ச் செய்கை அட்டவணையின் படி விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலைப் பின்பற்றி பயிர் செய்ய வேண்டும்.

பயிர்ச் செய்கை அட்டவணையின் படி வாய்க்கால் துப்புரவு மார்ச் 20ஆம் திகதி ஆரம்பித்து மார்ச் 26 ஆம் திகதி நிறைவுறும். பங்கு அணைத்தல் மார்ச் மாதம் 16 ஆம் திகதி. விதைப்பு இறுதி ஏப்ரல் 20 ஆம் திகதி. தண்ணீர் விநியோக ஆரம்பம் மார்ச் 20 ஆம் திகதி. தண்ணீர் விநியோக இறுதி நாள் ஜூலை 20 ஆம் திகதி. அறுவடை முடிவு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி. கால்நடை கட்டுப்படுத்தும் ஆரம்ப திகதி மார்ச் மாதம் 20 ஆம் திகதி. கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் இறுதித் திகதி ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி.

நெல், விதைத்து மூன்று அல்லது மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடியதாக நெல் இனங்கள் இருத்தல் வேண்டும் - என்றார். (த-7)

## கொவிட்19 தொடர்பாக விழிப்புடன் செயற்படுக

### அரசுக்கு கூறுகிறார் நாமல்

கொழும்பு, பெப்.27

கொவிட் 19 தொடர்பாக அரசு விழிப்புடன் இருக்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் நமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொவிட் 19 வைரஸ் ஏற்கனவே பல நாடுகளுக்கு பரவியுள்ளது. இது உலக சுகாதார மற்றும் பொருளாதார துறைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் இலங்கைப் பாராட்டுக்குரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில், வைரஸ் கட்டுப்பாட்டை மீறி பரவுவதால் மேலும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சீனாவிலிருந்து, தென் கொரியா, ஜப்பான் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில்சீனசுற்றுலாபயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இலங்கை ஐரோப்பிய சந்தைகளைச் சார்ந்துள்ளது. இப்போதுஐரோப்பாவும்குறிப்பிட்டஅளவுக்கு வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்காக தடுப்பு நடவடிக்கைகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் வலுப்படுத்த நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும். உலகப் பொருளாதாரத்தை எவ்வாறு நன்கு பாதுகாக்க முடியும் என்ற வழி முறைகளை கையாள வேண்டும் - என்றார். (எ)

# வீதி 'பல்பு'கள் பகலில் ஒளிர்ந்தால் மின் துண்டிப்பு



## மின்சார சபை எச்சரிக்கை

கொடிகாமம், பெப். 27

பகல் நேரங்களிலும் வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தால் மின்சார சபையினர் அத்தகைய இடங்களில் மின் விநியோகத்தைத் துண்டித்து மின்குமிழ்களைப் பிடுங்கிச் செல்வோம் எனக் கூரியுள்ளனர். மீள மின்விளக்குப் பொருத்தவேண்டுமெனின், ஒரு மின்விளக்குக்கு ஆயிரத்து நூறு ரூபா வீதம் செலுத்தப்பட வேண்டும். எனவே இந்த விடயத்தில் சபை உறுப்பினர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சபையின் மாதாந்த அமர்வு மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அங்கு அவர் இதைத் தெரிவித்தார். இந்த அமர்வில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனுடன் சில நாள்களுக்கு முன்னர் கலந்துரையாடிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

மலக்கழிவு அகற்றுவது தொடர்பிலும், உரமாக மாற்றுவது தொடர்பாகவும் பேசப்பட்டது. ஒரு சபைக்கு மாத்திரம் இதைச் செய்ய முடியாது என்றும் அண்மையில் உள்ள பிரதேச சபைகளுடன் இணைந்து செய்யும் பட்சத்தில் அதற்கான வாகனத்தையும் செலவையும் அமைச்சு செய்யும் என்றும் அமைச்சர் உறுதியளித்திருந்தார் என்றும் தவிசாளர் தெரிவித்தார்.

அதன்படி, வடமராட்சியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள், சாவகச்சேரி நகரசபை, கோப்பாய் சபை ஆகியனவற்றின் தவிசாளர்களோடு கதைத்துச் செயற்படுமாறு கூறியிருந்தார்.

அதேபோல், 'சோளர் பனல்' மூலமாக 10 ஏக்கர் காணிகளில் மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாகவும் கதைக்கப்பட்டது.

நிறைவான கிராமம் திட்ட (சப்ரிகம வேலைத் திட்டம்) அடிப்படையில் 72 வேலைத்திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த வேலைத் திட்டங்களைச் செய்வது தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து அனுப்புமாறு கூறப்பட்டது.

தேர்தலை அண்மித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அரசியல் ரீதியான மாற்றங்களால் அபிவிருத்தி பின்தங்கும் நிலை ஏற்படும். எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும். விரைவாகச்செய்ய முன்வர வேண்டும். வீதி மின் விளக்குகள் பொருத்தவெனச் சென்ற வருடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியிருந்தார்.

60 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை சபை நிதியில் செலவிடப்பட்டது. இந்த வருடமும் கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாவில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

'ஐறோட்' வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள்தான் சீரமைக்கப்படும். 2020, 2021 ஆகிய வருடங்களில் வீதிகள் சீரமைக்கும் திட்டமும் மூன்று வருடங்கள் பராமரிப்புக்கான காலமாகவும் அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறந்த நிர்வாகியாகக் கடமையாற்றிய மாவட்டச் செயலர் வலுக்கட்டாயமாக ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அவருடைய இடமாற்றம் அரச சுற்றறிக்கைப்படி தவறு. இதைக் கண்டிக்கின்றோம். -என்றார்.

(த-159)

## இளைஞர் எம்.பிக்கள் தெரிவில் முறைகேடா?

### ஆணைக்குழுவில் ஒரு முறைப்பாடு



தலைமன்னார்,பெப்.27

மன்னாரில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்று குற்றஞ்சாட்டும் சில இளைஞர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமான 'மெசிடோ' ஊடாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மன்னார் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இவ்வாறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று அவர்கள் குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளனர். மன்னார் நகர் பிரதேச செயலகத்தைச் சாராத சில இளைஞர்கள் ஏனைய பகுதிகளில் இருந்து பஸ்களில் வருகை தந்து தங்களுடைய வாக்குகளைச் செலுத்தியுள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த- 60)

## வறுமையின் கொடுமையால் உயிர்மாய்த்த அரச அலுவலர்!

### கிளிநொச்சியில் இப்படியோர் அவலம்

யாழ்ப்பாணம், பெப். 27

கிளிநொச்சியில் அரச ஊழியராக வாழ்ந்தபோதும்கூட, உண்ண உணவின்றி ஊழியர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் சுப்பிரமணியம் பத்மநாதன் (வயது 44) என்பவரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் வசித்த அவர் போர்க் காலத்தில் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருந்தார். 2011ஆம் ஆண்டு நாட்டுக்குத் திரும்பிவந்தார். பட்டதாரி என்ற வகையில் 2015இல் அரச நியமனம் பெற்றிருந்தார். நோய்வாய்ப்பட்ட தாய், நடக்க முடியாத சகோதரன் ஆகியோருடன் அவர் வசிக்கின்றார்.

வறுமையில் வாடிய இவருக்கு இருப்பிடம் இல்லாது கடன்பெற்று இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். கடனுக்குரிய தவணைப் பணம் கழிக்கப்பட்டு மிகச் சொற்ப பணமே அவருடைய கைக்கு கிடைத்துவந்தது. அவ்வாறு கிடைத்த பணமும் மருத்துவச் செலவுக்கே போதுமானதாக இருந்ததால் உணவுக்குப் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கினார். சில சந்தர்ப்பங்களில் சக ஊழியர்கள் உதவி புரிந்துள்ளனர்.

இந்த நிலையில், தொடர் வறுமை காரணமாக உணவின்றிப் பரிதாபகரமாக அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


அவர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். அவருடைய இறுதிக்கிரியைகூட பலரிடம் சேர்த்த பணம் மூலமாகவே மேற்கொள்ளவேண்டிய அவலம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவருடைய சகோதரன் சிகிச்சைக்கு மருத்துவமனைக்குச் சென்றால் ஒரு காலை அகற்றிவிடுவர்கள் என்று அஞ்சி மருத்துவமனைக்குச்செல்ல மறுக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவருடைய தாயாரும் நடக்க முடியாதவுக்கு நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஆடம்பரச் செலவுக்காக பலர் அதிகளவில் பணம் செலவிடுகின்றனர். ஆனால், சமூக ஆர்வலர்கள் என்றும் தொண்டு நிறுவனங்கள், பெரியவர்கள் என்று பலர் செயற்படும் நிலையிலும்கூட தனது குடும்பத்தைக் காத்துவருவதில் உள்ள இடர்பாடு மற்றும் தனது குடும்பத்துக்காக தன்னை வருத்தி உயிரிழந்தமை பெரும் கொடுமையாக பார்க்கப்படுகின்றது. இதேவேளை, இலங்கையில் வறுமையால் நைந்துபோயிருக்கும் முதல் மாவட்டமாகவும் கிளிநொச்சி மாவட்டமே விளங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-105)

## செயற்பட்டு மகிழ்வோம்

மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில், பாடசாலை அதிபர் செ. டெனேசன் புஸ்பகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக மாவிட்டபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் செ.நிஷாந்தன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் லயன் அ.கிருபாகரன் கௌரவிருந்தினராக பழைய மாணவர் நமசிவாயம் தம்பதியினர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ,5)

## மதிலேறி பாய்ந்து வந்த கும்பல் வீட்டை நொருக்கி அட்டகாசம்!



சாவகச்சேரி, பெப்.27

மதில் ஏறிப் பாய்ந்து வீட்டுக்குள் புகுந்த அடாவடிக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்த பொருள்களை அடித்து நொருக்கிச் சேதமாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவழ் கொடிகாமம், ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை 8 மணியளவில் நடந்துள்ளது.

"மதில் ஏறிப் பாய்ந்து 4 பேர் கொண்ட கும்பல் பொல்லுகளுடன் வந்தது. அதைக் கண்ட நாங்கள் வீட்டின் கதவுகளைப் பூட்டிவிட்டு உள்ளே இருந்தோம். வீட்டுக்குள் நுழைய முடியாத அந்தக் கும்பல் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் வீட்டின் முன் நின்ற மோட்டார் சைக்கிள் என்பவற்றைச் சேதமாக்கியது. வீட்டின் வாசல் பகுதியில் நின்ற கமுகுமரங்களையும் வெட்டிவீழ்த்திவிட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றது" என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-131,9,159)

## சில பகுதிகளில் உயர் வெப்பநிலை

கொழும்பு, பெப்.27

நாட்டின் சில பகுதிகளில் வெப்பநிலை உயர்நிலையில்காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமேல், மேல் மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை, மன்னார் மாவட்டங்களிலேயே இவ்வாறு வெப்பநிலை உயர் நிலையில் காணப்படுகின்றது என்று அந்தத்திணைக்களம் தெரிவித்துள்ளது. மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அந்தத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதிகமாக நீர் அருந்துமாறும் அறிவுறுத்தியுள்ளது.

(எ)

# கண்ணீர் அஞ்சலி


இ. சோமசுந்தரம்


ஆ. தேவராசா


தே. சுகந்தினி


தே. தர்சனன்

எமது **பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும், சங்கத்தின் பெருமைமிகு அனுசரணையாளருமான சோமசுந்தரம் கமலநாதன்** அவர்களின் தந்தையார், சகோதரி, மைத்துனர், மருமகன் ஆகியோரது எதிர்பாராத மரணச் செய்தி உலகம் வாழ் அனைத்து காரைநகர் மக்களையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

சம்பவத்தில் உயிர்நீத்த **எமது ஊரைச் சார்ந்த இளம் சாரதியின் உயிர் இழப்பும் துயரத்துக்குரியதே.**


துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, எம்மைவிட்டு பிரிந்து சென்ற அந்த நல்ல ஆத்மாக்கள் இறைவனடி சேர எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரேஸ்வரரை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

## நிர்வாகம்,
## பிரித்தானிய காரை நலன் புரிச்சங்கம்.

# மரண அறிவித்தல்

# சங்கரப்பிள்ளை சின்னையா


அன்னை மடியில் 18.12.1934 ஆண்டவன் அடியில் 23.02.2020

அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சின்னையா கடந்த (23.02.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாட்சி தம்பதிகளின் அன்புப்பேரனும் பத்மரத்தினம் அவர்களின் ஆருயிர் கணவரும், சித்திரா, கிருபாகரன், காலஞ்சென்றவர்களான அரிகரன், சிவலோஜினி, சுதாகரன் மற்றும் உதயச்செல்வி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிதரன், சமீரா, சதீஸ், முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமாவும் தர்சன், சேய்டன், ரேகான், கனா, சரோன், சகானா, மிதுன், மிதுனா ஆகியோரின் பாசமிகு பேரனும் சுப்பையா, தங்கம்மா, பூமணி, காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சிவஞானம், ராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் செல்வலட்சுமி, செல்வராஜா, நவசிவாயம், சிவபுத்திரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடிலேன், சங்கானை தகவல் : குடும்பத்தினர், 078 520 0750

# பொதுத் தேர்தலிலும் ஐ.தே.கவுக்கு சிங்களவர் பாடம் புகட்டவேண்டும்

## பொதுஜன சுதந்திர முன்னணியின் தவிசாளர் மைத்திரிபால கோரிக்கை



கொழும்பு, பெப்.27

ஊழல், மோசடிகளால் நாட்டை நாசமாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் சிங்கள மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் ஓரணியில் நின்று கோத்தாபய ராஜபக் ஷவுக்கு வாக்களித்தபடியால் அவர் அமோக வெற்றியடைந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர் படுதோல்வியடைந்தார்.

ஐ.தே.க. தலைமையிலான கூட்டணியின் படுதோல்விக்கும் அந்தக் கூட்டணி இன்று பிளவடைந்து காணப்படுகின்றமைக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே முழுப் பொறுப்பு. ஒரு புறத்தில் பதவி ஆசையில் பிரதமர் கதிரையில் அமர்ந்திருந்த ரணில், மறுபுறத்தில் ஊழல், மோசடிகளுக்குத் தலைமை தாங்கினார்.

நல்லாட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி தலைமையில் அமைகின்ற அரசு தக்க தண்டனையை வழங்கியே தீரும்.

பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் மட்டுமன்றி நாட்டிலுள்ள மூவின மக்களும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி வெற்றியடையும் வகையில் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். - என்றார். (எ-22)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

வட்டுக்கோட்டை, பெப்.27

யாழ்ப்பாணம் வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ஜெ.கோகுலவாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி. நேசமலர் மரியதாசன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவனும் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத் தலைவருமான சி.சிங்கராஜா, பழைய மாணவி திருமதி. சர்வேஸ்வரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## ஏழிசை மாலை நிகழ்வு

சாவகச்சேரி, பெப்.27

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்தும் ஏழிசை மாலை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியுமான பேராசிரியர் க.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர்களான ஐ.வரதராஜா, சோ.ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய இசை ஆசிரியர் ஐ.இரவிச்சந்திரனின் இசைக் கச்சேரி, அயல் பாடசாலைகளின் இசை ஆசிரியர்களான திருமதி சாந்தினி சிவலோகநாதன், திருமதி திருவேணி சுபாகரன், திருமதி பிரேமா கருணேஸ்வரன், திருமதி. கமலவேணி ஆனந்தரூபன், திருமதி சோபிகா பிரதாப் ஆகியோரின் மெல்லிசை., சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் நந்தகுமார் சேந்தனின். மிருதங்க இசை, மிருசுவில் அ.த.க.பாடசாலை மாணவர்களின் நாட்டார் பாடல், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் குழுக் பாடல் ஆகியவை நடைபெறவுள்ளன. அத்துடன் வித்தியாலய எல்லைப் பரப்பில் உள்ள கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும். (ஐ-9)

## எமது கலாசாரத்தை பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு வழங்க வேண்டும்

### யாழ்.பிரதேச செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.27

இந்த நவீன உலகில் எமது பண்பாடு மற்றும் கலாசாரத்தை பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கொடுக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் கடமை. இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சுதர்சன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலைகளுக்காக தங்களை அர்ப்பணித்து இன்றும் அவற்றை வளர்த்துக் கொண்டு இருக்கும் பல்வேறு கலைஞர்களை தன்னகத்தே கொண்ட மண் இது.

இவை எமது மண்ணின் கலாசாரத்தை இன்றும் அழிய விடாமல் பார்த்துக் கொள்கின்றது. இவை அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லப்படுகின்றது.

சில நூறு வருடங்கள் கொண்ட பண்பாடு அல்ல எங்களுடைய பண்பாடு பல ஆயிரம் வருடங்களைக் கொண்டது. ஆகவே எமது கலாசாரத்தை கட்டிக் காக்க நாம் முன் வர வேண்டும்.

எமது சந்ததிக்கு நாம் என்ன விடயங்களைக் கையளிக்கப்போகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும். ஆகவே இந்த நவீன உலகில் எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில் பல்வேறு கண் கவர் கலை நிகழ்வுகள் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பன நடைபெற்றன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் உட்பட அரச அதிகாரிகள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-7)

## மூவருக்கு மறியல்

சாவகச்சேரி, பெப்.27

பொல்லுகளால் தாக்கி காயப்படுத்திய 17 வயதுச் சிறுவன் உட்பட மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று உத்தரவிடப்பட்டது.

கடந்த வாரம் கிரிக்கெட் பயிற்சியின் போது ஏற்பட்ட மோதலில் கிரிக்கெட் பொல்லுகளால் தாக்கியதில் காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு இவர்களில் ஒருவர் 17 வயதுடையவர் எனத் தெரிவித்தமையால் இவரை சான்று பெற்ற பாடசாலையிலும், ஏனைய இருவரையும் மார்ச் மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

## விளையாட்டு மைதானம், கலையரங்கம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் குருநகர் தொடர்மாடி விளையாட்டு மைதானம் மற்றும் கலை அரங்கம் ஆகியவற்றின் திறப்பு நிகழ்வு நேற்று குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினரால் கிராம எழுச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம், கலை அரங்கம் என்பனவே திறக்கப்பட்டன. (ஐ)



# தமிழர் ஒற்றுமை என்ற பயம் அரசுக்கு இல்லை

## சாள்ஸ் எம்.பி. தெரிவிக்கின்றார்



வவுனியா, பெப். 27

"தமிழ் மக்களிடம் இருந்த ஒற்றுமை என்ற பயம் இன்று அரசுக்கு இல்லை. தமது பலம்' குறைந்துகொண்டே போகின்றது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா கோவில்குளம் கண்ணன் கோவில் அலங்கார நுழைவாயில் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களைச் சீர்குலைப்பதற்காக அடிப்படைவாதத்தின் கீழான பல்வேறு செயற்பாடுகள் வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வருகின்றன.

தமிழர்களை அழிப்பதற்கு தமிழர்களுக்கு உள்ளேயே பலகட்சிகளை உருவாக்கி கட்சிகளுக்கும் அப்பால் மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கி பிரிவினையை ஏற்படுத்தும் செயற்பாடு இடம்பெற்றுவருகின்றது. 2009 க்கு முன்னர் தமிழர்கள் தமிழர்களாகவே இருந்தார்கள். தந்தைசெல்வா எந்த மதம் என்று சிந்திக்கப்பட்டு அவரது கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தலைவர் பிரபாகரன் என்ன மதம்' என்று மக்கள் பார்க்கவில்லை. அங்கு கொள்கை தியாகம் உறுதியாக இருந்தது அதனால் மக்கள் பயணித்தார்கள். என்னைப் பொறுத்தவரை என்னுடைய தெய்வம் பிரபாகரனே. அவர் மேல் வைத்த பாசமும் பற்றுமே என்னை அரசியல்வாதி ஆக்கியது."

**கட்டமைப்பு பிரிக்கப்படுகின்றது**

இன்று தமிழர்களின் கட்டமைப்புகளை பிரிக்கின்ற சூழல் இராஜதந்திர ரீதியில் இடம்பெற்று வருகின்றது. இதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும். மன்னாரில் கடந்த சிலநாள்களாக ஒருவர் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளார். அவர் ஏன் இருக்கிறார் என்பது தெரியவில்லை. ஏதோஒரு பின்னணியில் தான் இருக்கிறார். அவராக இருக்கிறார் எனத் தெரியவில்லை. மக்கள் மத்தியில் கூட்டமைப்பு மீதான ஓர் அதிருப்தியான சூழலை ஏற்படுத்துவதற்கே அவர் இருக்கிறார் என அவரது நண்பர்களிற்கு தெரியப்படுத்தியிருக்கிறார். இது தமிழ் மக்களின் தனித்துவத்தை குழப்புவதற்கான ஒரு நடவடிக்கை.

கேதீஸ்வர வளைவு விடயத்தில் இரு தரப்புடனும் நான் கதைத்திருந்தேன். முரண்பட்டு எமது தனித்துவத்தை சவால்படுத்தாமல் பேசி தீர்க்குமாறு தெரிவித்திருந்தேன். - என்றார். (த-110)

# மாணவர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி, பெப். 27

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் 63 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் ரன் கெகுளு கணக்கு வைத்துள்ள மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிளை முகாமையாளர் சி.முரளிகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம், சாவகச்சேரி நகரசபை செயலாளர் சீ.சபேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-9)

# இரு பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பம்

சாவகச்சேரி, பெப். 27

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்வி அலகினரால் இவ்வருடங்களுக்கான தையல் மற்றும் வீட்டுமின்னிணைப்பு பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தையல் பயிற்சி வகுப்புகள் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்திலும், வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி வகுப்புகள் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையிலும் நடத்தப்படவுள்ளன.

பயிற்சிகளைப் பெற விரும்பும் இளையோர் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்திலும், தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவிலும், உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# வேலைத் திட்டங்கள் மாறியதால் வெளிநடப்பு

சாவகச்சேரி, பெப். 27

மக்களால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்கள் மாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்விலிருந்து நான்கு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை பிரதேசசபையின் அமர்வு நடைபெற்ற போது கிராமத்துக்கு 20 லட்சம் ரூபா வேலைத் திட்டத்தில் அந்தந்த கிராம மக்கள் முன்னுரிமை அடிப்படையில் கூறும் வேலைத் திட்டங்களுக்குப் பல வீதிச் சீரமைப்பு வேலைகளுக்குப் பதிலாக வேறு வேலைத் திட்டங்களுக்கு மாற்றப்பட்டன.

இது பற்றி உரையாற்றிய உறுப்பினர், அவ்வாறு மாற்றுவது மக்களின் முன்மொழிவுகளை நிராகரிப்பதற்கு சமம் என்பதால் மாற்றுவதற்கு. எதிர்ப்புத் தெரிவித்து கண்டனம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று உரையாற்றினார். ஏனைய உறுப்பினர்கள் கிடைத்த நிதியில் வேலைகள் நடைபெற்றால் போதும் என்ற ரீதியில் கருத்துத் தெரிவித்து உறுப்பினரின் கோரிக்கையை நிராகரித்தனர்.

இதனால் சபையில் அங்கம் வகிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் நால்வரும் சபை அமர்விலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்து வெளியேறினர் என்று சபையின் உப தவிசாளர் க.மயூரன் தெரிவித்தார். (த-9)

# மார்ச் ஒன்று முதல் 1000 ரூபா சம்பளம்

கொழும்பு, பெப். 27

தோட்டத்தொழிலாளர்களுக்கு அளித்த வாக்குறுதியின் பிரகாரம் மார்ச் முதலாம் திகதியில் இருந்து ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தோட்டக் கம்பனிகளுடனும் இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் அரச ஊடக பேச்சாளருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது


அதே போன்று வறுமை நிலையில் இருக்கும் ஒரு இலட்சம் குடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கு தொழில் வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. 4 இலட்சத்துக்கும் அதிக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இடம்பெறும். விண்ணப்பித்த அனைவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு கிடைக்காதவர்கள் பிரதேச செயலகங்களில் அது தொடர்பாக முறையிடலாம். இவர்களுக்கு மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு நியமனம் வழங்கப்படும்.

54 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கப்படும் என அரசு தெரிவித்து அதற்கும் விண்ணங்கள் கோரப்பட்டன. பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரமளவில் இடம்பெற இருக்கின்றது. அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்கப்படும்.

கடந்த அரசு மக்களுக்கு சுமக்க முடியாதளவு வரிச் சுமையை உயர்த்தியிருந்தது. அதனால் நாங்கள் வற் வரியை 15 வீதத்தில் இருந்து 8 வீதமாகக் குறைத்திருக்கின்றோம். ஆனால் அரசு வற் திருத்தம் மேற்கொள்ள பாராளுமன்றத்தில் அனுமதி பெறவில்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்கும்வகையில் வரியை குறைத்திருக்கின்றோம் - என்றார். (எ)

# ஆலய அலங்கார வளைவு திறப்பு



வவுனியா, பெப். 27

வவுனியா கோவில்குளம் ஸ்ரீதேவி பூதேவி சமேத மகாவிஷ்ணு ஆலய நுழைவாயில் வளைவு திறப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஆலயத் தலைவர் பி.சுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அலங்கார வளைவு அமைப்புக்காக கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. (ஐ-110)





# செம்மை வாழ்வு தரும் செவ்வாய் விரதம்

விண்வெளியில் பூமிக்கு அடுத்துள்ள கிரகம், செவ்வாய். அதோடு செவ்வாய்க்கு 'பூமிக்காரகன்' என்ற பெயரும் உண்டு. ஏனென்றால் பூமியைப் போன்றே ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை செவ்வாயில் இருப்பதாக நம்பப்படுகிறது. கிரகங்களில் மிகக் கடினமான பாறைகளால் ஆன கிரகம் செவ்வாய். அது உறுதியான, வலிமையான கிரகமாகும். மிக உஷ்ணமான கிரகமும் செவ்வாய்தான். மண்ணாசையை குறிப்பது செவ்வாய் கிரகம். மண்ணாசை உள்ளவன் பூமியை ஆக்கிரமிக்க நினைப்பான்.

செவ்வாய் 'சகோதர காரகன்' என அழைக்கப்படுகிறார். சோதிட சாஸ்திரத்தில் சகோதரர்கள் நிலை பற்றி, செவ்வாயின் நிலை கொண்டே கணிக்கப்படுகிறது. செவ்வாய் போர்க் குணம் கொண்ட ஒரு கிரகம். மேஷத்தில் செவ்வாய் இருக்கும் போது, எந்த காரியத்தையும் வெறித்தனமாக செய்யும். விருச்சிகத்தில் செவ்வாய் இருந்தால் வேகம் குறைவாக இருக்கும். பெண்களின் ருது நிகழ செவ்வாய் மிக முக்கிய காரண கர்த்தாவாக இருக்கிறார்.

சகோதரம், வீரம், வெட்டுக்காயம், தீக்காயம், விபத்தில் ரத்தம் அதிகமாக உடம்பில் இருந்து வெளியேறுதல், எதிரிகள், காம இச்சை, கெட்ட பெயர் எடுத்தல், மழை பெய்யாமல் போகுதல், விளையாட்டு கலை, போர்க்கலை போன்றவை செவ்வாயின் காரத்துவம்.

செவ்வாய்க்கு 4, 7, 8 ஆகிய பார்வைகள் உள்ளன. 2, 4, 7, 8, 12 ஆகிய வீடுகளில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் ஏற்படும். செவ்வாயின் பிற பெயர்கள் பூமிக்காரகன், சேய், அங்காரகன், குஜன் ஆகும்.

ஜனன கால ஜாதகத்தில் செவ்வாய் வலிமை பெற்றவர்கள், தைரியம், நிர்வாகத் திறன், முரட்டுத்தனம், பிடிவாதம், கோபம், அதீத காம உணர்வு, போட்டி மனப்பான்மை மிக்கவர்களாக இருப்பார்கள். அத்துடன் அரசியல், மத்திய அரசுப்பணியாளர், சீருடைப் பணியாளர்கள், ராணுவம், விளையாட்டு வீரர், தற்காப்பு கலையில் ஆர்வம், கட்டுமஸ்தான உடல்வாகு உள்ளவராகவும் இருப்பர். செவ்வாய் பலம் பெற்றவர்களுக்கே, வீடு மற்றும் வாகன யோகம் சிறப்பாக அமையும்.

இந்த ஜாதகரின் சகோதரர்கள் நல்ல உயர்ந்த நிலையில், ஆரோக்கியமானவர்களாக இருப்பார்கள். சகோதரர்களுடன் நட்புறவு ஏற்படும். அதே வேளையில் ஜாதகர் பெண்ணாக இருந்தால், அவரது கணவர் உயர்ந்த நிலையில் இருப்பார்.

முருகன் வழிபாட்டிலும், சிவப்பு நிற ஆடைகள் அணிவதிலும் ஆர்வம் ஏற்படும். முக்கிய நிகழ்வுகள் எல்லாம் செவ்வாய் ஓரையில் நடக்கும். மேஷ, விருச்சிக லக்னம் அல்லது மேஷ, விருச்சிக ராசியில் பிறந்தவர்களின் நட்பு உண்டாகும். செவ்வாயின் நட்சத்திரங்களான மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடன் நட்பு ஏற்படும். அறுவை சிகிச்சை மருத்துவருடன் தொடர்பு கிடைக்கும். மாமிச உணவு வகை மீது அதிக நாட்டம் உண்டாகும். கலகம் செய்வதில் விருப்பம் உண்டாகும். மலைப் பிரதேசங்களுக்குச் சென்று வர வாய்ப்புக் கிடைக்கும்.

ஜனன ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைந்தவர்களுக்கு, சகோதரர்கள் தாழ்ந்த நிலையில் சலன புத்தி உடையவராக இருப்பார்கள். பெண் ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைந்தால் கணவருக்கு முன்னேற்றக் குறைவு ஏற்படும். வீடு, வாகன யோகம் குறையும். அரசு பணி, அரசு ஆதரவில் தடை தாமதம் ஏற்படும்.

அப்படி இருப்பவர்கள் செவ்வாய்க்கிழமை சிவப்பு நிற ஆடை அணிந்து விரதமிருந்து, மலை மீதுள்ள முருகனை வழிபடுவது நல்ல பலன் தரும். செவ்வாய்க்கிழமை சிவப்பு துவரை தானம் செய்ய வேண்டும். தினமும் கந்த சஷ்டி கவசம் கேட்க வேண்டும் அல்லது பாராயணம் செய்தல் வேண்டும்.

# வடக்கு நோக்கி தலைவைத்து உறங்கக் கூடாது...!

இயற்கையாகவே இந்த பூமியைச் சுற்றி அமைந்துள்ள காந்தப்புலத்தின் வீரியம் வடக்கு திசையில்தான் குவிந்திருக்கும். இந்த விசையானது மூளையைப் பாதிக்கும் என்பதால் வடக்கு நோக்கி தலை வைத்து உறங்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள்.

இந்த அறிவியல் உண்மையைச் சொன்னால் எம்மவர்களுக்கு எளிதில் புரியாது என்பதால் ஆன்மிக ரீதியிலான ஒரு கதையையும் சொல்லி வைத்தார்கள். பார்வதிதேவி மஞ்சளில் ஒரு பாலகனின் உருவத்தைச் செய்து அந்த உருவத்துக்கு உயிர் அளித்து வாயிலில் காவல் வைத்துவிட்டு குளிக்கச் சென்றாராம். அந்த நேரத்தில் பரமேஸ்வரன் அங்கு வர வாயிலில் காவலாக நின்ற சிறுவன் அவரைத் தடுத்து நிறுத்தவே கோபம் கொண்ட பரமேஸ்வரன் அந்தச் சிறுவனின் தலையைக் கொய்துவிடுகிறார்.

பார்வதிதேவி குளித்து முடித்து வெளியில் வந்ததும் நடந்ததை அறிந்து மனம் வருந்த, பரமேஸ்வரன் இறந்த பிள்ளைக்கு மீண்டும் உயிரளிக்க வேண்டி தனது பணியாள்களிடம் யார் வடக்கு நோக்கி தலை வைத்து படுத்திருக்கிறார்களோ அவரது தலையை வெட்டிக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவிட்டாராம்.

இறைவனின் ஆணையைப் பின்பற்றிச் சென்ற பணியாள்கள் ஒரு யானை வடக்கு நோக்கித் தலைவைத்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அந்த யானையின் தலையை வெட்டிக் கொண்டு வந்து இறைவனிடம் ஒப்படைக்க, அந்த யானையின் தலையைப் பிள்ளைக்குப் பொருத்தி உயிர்ப்பித்து பிள்ளையாராக மாற்றினார் என்று ஒரு புராணக்கதையைச் சொல்வார்கள்.

வடக்கே தலை வைத்துப் படுத்தால் தலை வெட்டப்பட்டுவிடும் என்ற கருத்தினை உள்ளடக்கிய இந்தக் கதையின் மூலம் அவ்வாறு வடக்கு நோக்கி தலை வைத்து படுக்கக்கூடாது என்பதனை பெரியவர்கள் வலியுறுத்திச் சொல்வார்கள்.

காந்தப் புலத்தின் வீரியம் முழுவதும் வடதிசையில் வந்து குவிவதால் வடக்கு நோக்கி தலை வைத்துப் படுக்கக் கூடாது. அவ்வாறு செய்வதால் மூளைக்குக் கேடு உண்டாகி உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்பதே அந்தக் கதையின் மூலமாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை உண்மையாகும்.



# சகல பாவம் போக்கும், செல்வம் பெருக்கும் மூன்றாம் பிறை தரிசனம்

வானில் தோன்றும் மூன்றாம் பிறை நிலவைத் தரிசிப்பதையே, 'பிறை காணுதல்' என்கின்றனர். பஞ்சாங்கத்திலும், நாள்காட்டியிலும் மூன்றாம் பிறையை மக்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக 'சந்திர தரிசனம்' என்று குறிப்பிட்டுள்ளது.

மூன்றாம் பிறையைப் பார்த்தால் செல்வம் சேருமா? என்றும் நான்காம் பிறையைப் பார்த்தால் கஷ்டங்கள் உண்டாகும் என்றும் கூறுகிறார்கள்.

சுறுசுறுப்போடு அதேநேரம் சிறுகச் சிறுக வளர்ந்தால் முழுப்பலனையும் அடையமுடியும் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது இந்த பிறை.


இதை வைத்துத்தான் எண்பது வயது நிறைவுற்றவர்களை 'ஆயிரம் பிறை கண்டவர்' என்று அவருக்குச் சதாபிஷேகம் செய்து கொண்டாடுகின்றோம்.

**பலன்கள் :**

அமாவாசையை அடுத்து வரும் மூன்றாம் நாளில் சந்திர தரிசனம் காண்பவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். கண் பார்வை தெளிவாகும். செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் வரும் மூன்றாம் பிறை மிகவும் விசேஷமான ஒன்றாகும்.

குறிப்பாக சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் இப்பிறையைக் கண்டால் ஓர் ஆண்டு சந்திர தரிசனம் செய்த பலன் கிடைக்கும்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் வரும் மூன்றாம் பிறையைக் கண்டால் சகல பாவங்களும் தொலையும்.







# 100 ஆண்டுகள் பழமைமிக்க ரயில் நிலையத்தில் பெரும் தீ

நியூயோர்க், பெப்.27

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரயில் நிலைய மொன்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சீபோர்ட் ஏர் லைன் ஸ்டேஷன் என்று அழைக்கப்படும் இந்த ரயில் நிலையம் 1927 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 1991 வரை ஒரு ரயில் நிலையமாக பயன்படுத்தப்பட்டது. இது பின்னர் 1986 ஆம் ஆண்டில் வரலாற்று இடங்களின் தேசிய பதிவேட்டில் இணைக்கப்பட்டது.

இந்த ரயில் நிலையத்தில் தீ பரவிய நிலையில், அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக தீ விபத்து தொடர்பான தகவல்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுமார் 30 தீயணைப்பு வண்டிகள் மற்றும் மீட்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்த தீ விபத்தால் உயிரிழப்புகள் எதுவும் பதிவாகாத நிலையில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர போராடிய தீயணைப்பு வீரர் ஒருவர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தத் தீ விபத்து தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு இளைஞர்களை அந்த மாகாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஏ)

பொலிஸார் வேலை நிறுத்தம்

## ஐந்து நாள்களில் 147 கொலைகள்



பிரேசிலில் பொலிஸாரின் வேலை நிறுத்த போராட்டத்தால் குற்றங்கள் அதிகரித்துள்ளமையோடு, கடந்த 5 நாள்களில் மட்டும் 147 கொலைகள் நடந்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரேசிலின் வடகிழக்கு பகுதியில் உள்ள சீரா மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸார் தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 19ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த நாட்டு சட்டத்தின்படி பொலிஸார் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றமை சட்டப்படி குற்றமாகும். அண்மையில் இது தொடர்பான வழக்கை விசாரித்த மாகாண நீதிமன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் பொலிஸார் சிறைத் தண்டனையை எதிர்கொள்ள வேண்டும் என தீர்ப்பளித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். எனினும் பொலிஸார் போராட்டத்தை கைவிட மறுத்து, வேலை நிறுத்தத்தை தொடர்ந்து வருகின்றனர். இதனிடையே பொலிஸாரின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் சீரா மாகாணத்தில் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதிக அளவில் கொலைகள் நடக்கின்றன. கடந்த 5 நாள்களில் மட்டும் 147 கொலைகள் நடந்துள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதையடுத்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரும் விதமாக சீரா மாகாணம் முழுவதும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு உள்ளனர். அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். (ஏ)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 04 . 1952



மறைவு
01 . 03 . 2017

**அமரர் சுந்தரமூர்த்தி பாலச்சந்திரன்**

திதி:பூர்வபக்க சதுர்த்தி (27.02.2020)

எங்கள் அன்புத் தெய்வமே!
அன்போடு அரவணைத்து அறிவுரைகள் கூறி
அவனியில் வாழ்ந்து
தம் குடும்பம் காத்து வந்தீர்கள்
எம்மைக் கண்ணீர் சிந்தி பரிதவிக்க விட்டு
ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டது.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

நெருஞ்சியோலை,
பன்னாலை,
தெல்லிப்பழை.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி.

## மரண அறிவித்தல்

### அரியகுட்டி இந்திரராசா (கிளி)



மூளாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆனந்தம் வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி இந்திரராசா (கிளி) 26.02.2020 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன், மிதுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (பாலு), புஸ்பராசா, தவமலர், பரஞ்சோதி (குணம்), பவானி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, தங்கம்மா, நடராசா, லலிதாம்பிகை (சறோஜா), பாக்கியநாதன் (நாதன்), பேரின்பராசா (ராசன்), ஜெயா, துரைராசா (சதா), சறோஜாதேவி (கிளி), காலஞ்சென்றவர்களான ஆனந்த பாஸ்கரன், புவனேஸ்வரி, சற்குணமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தம் வைரவர் கோயிலடி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் மனோன்மணி

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மனோன்மணி நேற்று (26.02.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சின்னப்பு ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், ரவிந்திரன், மாலினிதேவி, ரவிச்சந்திரன், நவமலர், ரவிகாந்தன், காலஞ்சென்ற ரவிநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், ராசகோபால், சிறிலிங்கம், பாலரஞ்சினி, ஊர்நிலா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

077 983 7845

தகவல்:
ராஜகோபால், மாலினி
குடும்பத்தினர்.

# சிரியாவில் நடந்த தாக்குதலில் சிறார்கள் உட்பட 21 பேர் சாவு!



டமஸ்கஸ், பெப்.27

சிரியாவின் இட்லிப் நகரில் இடம்பெற்ற வான்வழி மற்றும் தரை வழி தாக்குதல் சம்பவம் ஒன்றில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வ தேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சிரியாவில் உள்ள வைத்தியசாலை மற்றும் பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 குழந்தைகள், 3 ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 21பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு மருத்துவ பராமரிப்பு மற்றும் நிவாரண அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்தோடு சம்பவத்தில் காயமடைந்து 80க்கும் மேற்பட்டவர்களில் குழந்தைகள் மற்றும் பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிரிய படையினர் மற்றும் ரஷ்யப் படையினர் இணைந்து பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிரியாவின் இட்லிப் மாகாணத்தின் தெற்கு கிராமப்புறங்களில் உள்ள பல நகரங்களை கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து கைப்பற்றியுள்ளனர் என அறிவித்திருந்த அந்த நாட்டு இராணுவத்தினர் ரஷ்ய இராணுவத்தினருடன் இணைந்து பல்வேறு தாக்குதல்களை இந்தப் பகுதியில் நடத்தி வருகின்றனர். (ஏ)

# விலங்கு விற்பனைக்கு தடை

பீஜிங், பெப்.27

சீனாவில் விலங்குகளின் விற்பனை மற்றும் நுகர்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் உயர் சட்ட மன்றமான தேசிய மக்கள் காங்கிரஸால் கொரோனா வைரஸ் காரணமாக குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவில் கடந்த ஜனவரி மாத ஆரம்ப காலப்பகுதியில் இருந்து விலங்குகளின் விற்பனை மற்றும் நுகர்வு நிறுத்தப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து தற்போது சீனாவில் உத்தியோகபூர்வமாக விலங்குகளின் விற்பனை மற்றும் நுகர்வுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 37 நாடுகளைச் சேர்ந்த 80 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவில் இதுவரையில் இரண்டாயிரத்து 715 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் மாத்திரம் தற்போது, 78 ஆயிரத்து 64 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், 27 ஆயிரத்து 323 பேர் குணமடைந்து, மருத்துவமனைகளில் இருந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும் சீனா தெரிவித்துள்ளது. (ஏ)

# கொரோனாத் தாக்கத்திலிருந்து தானாக மீண்ட 17 நாள் குழந்தை!





பீஜிங், பெப்.27

சீனாவில் வுகான் நகரில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் அந்த நாடு முழுவதிலும் பரவி பெருமளவிலான உயிரிழப்பை ஏற்படுத்தி உள்ளதோடு ஆஸ்திரேலியா, ஈரான், இத்தாலி, மலேசியா என உலகின் 25க்கும் அதிகமான நாடுகளுக்கும் பரவி உலகளவில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இநத வைரஸ் தாக்குதலுக்கு சீனாவில் பலியானோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 663 ஆக உயர்ந்துள்ளது. 77 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பரவியுள்ளது என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


பல உயிர்களைக் காவு கொண்ட இந்த கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வுகான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவருக்குக் கடந்த 5ஆம் திகதி அழகான பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

உடனடியாக குழந்தைக்கு கொரோனா பாதிப்பு உள்ளதா என வைத்தியர்கள் பரிசோதனை செய்தனர். பரிசோதனையில் குழந்தைக்கு தாய் மூலமாக கொரோனா பரவியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சியோசியோ என பெயர் வைக்கப்பட்ட அந்தக் குழந்தையை வைத்தியர்கள் தீவிர கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

ஆனால் ஏனைய கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை எதுவும் குழந்தை சியோசியோவுக்கு அளிக்கப்படவில்லை. வைரஸ் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டதால் கண்காணிப்பு நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டனவே தவிர வைரஸ் தடுப்பு மருந்துகள் எதுவும் வழங்கப்படவில்லை.

17 நாள்கள் வைத்தியர்களின் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த குழந்தை சியோசியோ எந்த சிகிச்சையும் வழங்கப்படாமல் தானாகவே கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து பூரணமாக குணமாகியுள்ளாள். இது வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் சுகாதாரத் தரப்பினர்களுக்கும் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தை சியோசியோ வைரஸ் பாதிப்பில் இருந்து பூரண குணமடைந்தமையை அயடுத்து கடந்த 21ஆம் திகதி மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்று வுகான் மருத்துவமனை வைத்தியர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். (ஏ)



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும் நாள். அலைச்சல் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்களைக் கையாள்வதில் கவனம் தேவை. மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடம் வரலாம்.

**இடபம்:** வளர்ச்சி கூடும் நாள். வருங்கால நலன் கருதி எடுக்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். உடல் நலத்தில் கவனத்தைச் செலுத்துவது நல்லது. தெய்வழிபாடுகளில் நம்பிக்கை கூடும். உறவினர்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர்.

**மிதுனம்:** ஆதாயம் அதிகரிக்கும் நாள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த தகவலொன்று வந்து சேரலாம். அந்நிய தேசத் தொடர்பு அனுகூலம் தரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. பயன் தராத பொருளை வாங்கக்கூடாது.

**கடகம்:** ஆரோக்கியத் தொல்லை அகலும் நாள். அரசுவழிக் காரியங்கள் அனுகூலமாக முடிவடையும். அரைகுறையாக நின்ற பணியை தொடருவீர்கள். சாமர்த்தியமான செயல்பாடுகளால் சாதனை படைப்பீர்கள்.

**சிம்மம்:** முன்யோசனையுடன் செயல்பட வேண்டிய நாள். பேச்சில் நிதானம் தேவை. நண்பர்களுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. ஆலய வழிபாட்டால் அமைதி காண இயலும்.

**கன்னி:** துணிவும் தன்னம்பிக்கையும் கூடும் நாள். எதிரிகள் விலகுவர். கூட்டுத்தொழிலை தனித்தொழிலாக மாற்றலாமா என்ற சிந்தனை மேலோங்கும். அலுவலகப் பணிகளில் இருந்த அல்லல் தீரும். வெகு நாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும் நாள். ஆடை, ஆபரண, சேர்க்கை உண்டு. வருமோ, வராதோ என நினைத்த பணம் கைக்கு கிடைக்கலாம். நட்பு வட்டம் விரி வடையும். உத்தியோக வாய்ப்புக் கைகூடும்.

**விருச்சிகம்:** வரவு திருப்தி தரும் நாள். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும் கண்ணியமிக்கவர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர். தொழிலில் புதிய பணியாளர்களை சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிக்கும் நாள். வெளி வட்டாரத் தொடர்பு விரும்பும் விதத்தில் அமையும். வீடு, நிலம் சம்பந்தமாக முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**மகரம்:** கடிதம் மூலம் கனிந்த தகவல் வந்து சேரும் நாள். நினைத்தது நிறைவேறும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு. வாகனப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** அமைதி கூடும் நாள். உறவு பகை பாராமல் அனைவருக்கும் உதவி செய்வீர்கள். தடைபட்ட வருமானம் தானாகவே வந்து சேரலாம். அயல்நாட்டு முயற்சி அனுகூலம் தரும்.

**மீனம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழும் நாள். இல்லத்தினர்களின் ஒத்துழைப்போடு பணிகளைச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.



## மாணவர்கள் கௌரவிப்பு!

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சி கல்வி வலய ஆங்கிலதின போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்கினார்.

நிகழ்வில் கிளிநொச்சி வலய கல்வி பணிப்பாளர், கிளிநொச்சி வலயத்தின் ஆங்கில பிரிவு பணிப்பாளர்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ.214)

## வர்த்தக நிலையத்துள் அத்துமீறித் தாக்குதல்

### இனந்தெரியாத குழு அடாவடி

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை 6 மணியளவில் அத்துமீறி நுழைந்த கும்பல் வர்த்தக நிலையமொன்றை மொன்றை அடித்துச் சேதப்படுத்திவிட்டுச் சென்றது. தப்பித்துச் செல்லும்போது முச்சகர வண்டியொன்றையும் அந்தக் கும்பல் அடித்துச் சேதப்படுத்தியது.

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றிலேயே இந்தக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுள்ளது. இரண்டுமோட்டார்சைக்கிள்களில் ஐவர் வருகை தந்து அவ்வாறு அடாவடித்தனம்புரிந்துள்ளனர். அவர்கள்பயணித்தமோட்டார்சைக்கிள்களுக்கு இலக் கத்தகடுகள் இல்லை. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## குற்றவாளிகளுக்கு அரச பதவிகள்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சிறந்த நிர்வாகத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்சவே சீர்குலைக் கின்றார் என்று மக்கள் கருதுவது முற்றிலும் தவறானதாகும். நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என்று குறிப்பிடப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி அரச உயர் பதவிகளை வழங்கியுள்ளார்' இவ்வாறு குற்றம்சாட்டினார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்நாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளும் கிடையாது. தேர்தல் காலத்தில் தேசத் துரோக ஒப்பந்தமாக விமர்சிக்கப்பட்ட எம்.சி.சி ஒப்பந்தத்தை நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இரகசியமான முறையில் கைச்சாத்திடும் முயற்சியை அரசு முன்னெடுக்கின்றது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் அரசு தரமான நடவடிக்கைகளை இதுவரையில் முன்னெடுக்கவில்லை. ஆனால், தமக்குத் தேவையானவர்களை நாட்டுக்குக் கொண்டு வந்து அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட் டுக்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் நடடிக்கைகளை இந்த அரசு முன்னெடுத்துள்ளது.

ஜெனிவா விவகாரத்தில் அரசு தற்போது முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் ஒன்றும் புதிதான விடயமல்ல. சர்வதேசத்தின் மத்தியில் நாடு பல நெருக்கடியை எதிர்கொள்ள 2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச்செயலாளர் நாயகத்துடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தமே பிரதான காரணமாகும்' - என்றார். (ம-22)

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

விபத்தில் முதியவரொருவர் உயிரிழந்தார். பளை பகுதியைச் சேர்ந்த தில்லையம்பலம் மகேஸ்வரன் (வயது - 67) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பயணித்த போது அவரை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதித்தள்ளியுள்ளது. இதையடுத்துக் காயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காமல் நேற்று இரவு உயிரிழந்தார். (ம-9)

### த.தே.கூட்ட...

ரஞ்சன் ராமநாயக்க.

நீதிமன்றத்தால் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டபின்னர், நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே ரஞ்சன் ராமநாயக்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வாய்ப்பு வழங்காவிட்டால் என்ன செய்வீர்கள் என எழுப்பட்ட வினாவுக்கு பதிலளித்த ரஞ்சன் ராமநாயக்க,

'கூட்டணியில் வாய்ப்பளிக்கப்படும் என சஜித் பிரேமதாஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் கூறினர். எனினும், கூட்டணியில் அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் தாம் வாய்ப்பளிப்போம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த இரு தரப்புகளும் கதவடைப்பு செய்யும் பட்சத்தில் சுயேட்சையாக வேனும் போட்டியிடுவேன்' என்றார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ரஞ்சன் ராமநாயக்கவை பிணையில் செல்வதற்கு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார். அத்துடன், வெளிநாடு செல்ல நீதவான் மொஹமட் மினார் பயணத் தடை விதித்தார்.

நீதிமன்ற செயற்பாடுகளுக்குள் அநாவசியமாக தலையீடு செய்த குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டு 44 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

### மஹிந்தவே...

தேசியக் கட்சி தெரிவித்திருப்பது பகல் கனவாகும்' இவ்வாறு கூறினார் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

'பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவோம். இது உறுதி' எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கூறிய கருத்துப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைப் பிரகடனத்தை அர்ஜுன் அலோசியஸுக்குச் சொந்தமான அச்சகத்தில் அச்சிட்டுள்ளதாகவும், அதனால் அலோசியஸுக்கு எதிராக இருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு அரசு நடவடிக்கை எடுக்கப்போவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் அலோசியஸின் அச்சகத்தில் அச்சிடப்பட்டதாகத் தெரிவிப்பதில் எந்த உண்மையும் இல்லை. முடிந்தால் அதனை நிரூபித்துக் காட்டுமாறு சம்பிக்க ரணவக்கவிடம் சவால் விடுக்கின்றேன்' -என்றார். (ம-22)

### தேர்தலுக்கு...

நேற்று நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத் தேர்தலுக்கென இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும், நாடாளுமன்றத்தைக் கலைத்த பின்னர், அவசர சந்தர்ப்பங்களின் போது நிதியத்தில் இருந்து நிதி வழங்க முடியும் என அரசியலமைப்பில் காணப்படுகின்றது. எனினும், அவ்வாறு நிதியமொன்று இதுவரை உருவாக்கப்படவேயில்லை. இதனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் விசேட பத்திரத்தின் ஊடாக ஜனாதிபதி மூலமே நிதியைப்பெற முடியும்" எனவும் இதன் போது மஹிந்த தேசப்பிரிய கூறினார். (அ)

### பலாலியில்...

குறித்த பகுதியில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று சங்கானை மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் அவர்கள் கடற்படையினருடன் இணைந்து நடத்திய தேடுதல் தடவடிக்கையின்போது இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அவற்றை மறைந்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 29 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-105)

கோடீஸ்வர கப்ருக
B 21 65 68 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,350,480/-
சீட்டிழுப்பு வாரம் 564
திகதி 2020 பெப். 25
வர்ணம் இளஞ்சிவப்பு
செவ்வாய்

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 895
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,435,680/-
வெற்றி இலக்கங்கள் 04 12 50 63
ஆங்கில எழுத்து L

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3306
திகதி: 2020.02.26
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 25 42 45
ஆங்கில எழுத்து P
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 35,228,790/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26.02.2020
வெற்றி வாரம் 2781
வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 10 27 35 46
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,409,602/=

டபள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்காக 2332
ரூ.100 பரிசுக்காக 910
விசேட இல.
27.02.2020 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 326
சீட்டிழுப்பு திகதி 26.02.2020 நீலம்
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 24 37 62
விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 52,447,364/=
28.02.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகளுடன் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## நிதிய ஆரம்பிப்பும் மதிப்பளிப்பும்

வயாவிளான்,பெப்.27
வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் ஆலய அறக்கட்டளை நிதியம் ஆரம்பிப்பும், வசதியற்ற பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்தி கல்லூரியில் நடைபெறும். (ஐ)

## கடற்சங்கால் மறியல்!

யாழ்ப்பாணம்,பெப்.27
கடற்சங்குகளை அனுமதி இல்லாமல் கொண்டு சென்றவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை 1000 கிலோ சங்குகளை கடத்த முற்பட்டவரை மண்டதீவுப் பகுதியில் வைத்து மண்டைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தன் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் அன்றே ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ந.ஓ)

## புதைந்த கஞ்சா வெளிவந்தது

முல்லைத்தீவு,பெப்.27
முல்லைத்தீவு - சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் பொலிஸாரால் நேற்று 6 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

**தேவை** அனுபவம் உள்ள
**மேசன் கூலி** ஆள்கள் தேவை.
**076 660 1600**

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசையா ஜெயகோபால்**
(யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியற்துறை, தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

மலர்வு
28.06.1961

உதிர்வு
27.02.2012

திதி: வளர் பிறை ஷஷ்டி
(29.02.2020)

பண்பின் சிகரமாய் உங்கள் வசீகரமான
பேச்சால் எல்லோரையும் வழிநடத்தினீர்கள்
எம்மை விட்டுப் பிரிந்து எட்டு ஆண்டுகள்
கடந்தாலும் என்றும் எங்கள்
நினைவுகளில் நீங்காது நிலைத்திடுவீர்கள்
இறைவன் திருவடியில் இளைப்பாற
உங்களுக்காய் பிரார்த்திக்கின்றோம்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(CS31507) (13.17)

என்றும் உங்கள் நீங்கா
நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 29.01.2020 புதன்கிழமை இறைபதமடைந்த எமது
குடும்பத்தலைவி

அமரர் திருமதி
**கமலேஸ்வரி ஆறுமுகம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை
(28.02.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து
மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

22. முருகன் கோவிலடி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 255 0807

## மரண அறிவித்தல்

### முருகேசு மகாதேவன் (தேவன்)



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மகாதேவன் 24.02.2020 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரன் (சிவனி-நியூசிலாந்து), கனகசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், சிறிகாந்தன், விஜிதா, சித்திரா, நிலானி, வித்தகன் ஆகியோரின் பெரியப்பாவும், பிரியதர்ஷனியின் மாமனாரும், செல்லத்துரை ஞானேந்திரம் (லயிட் ஞானம்), தவமலரின் (குஞ்சு மாமி) உறவினரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பலகாடு ஞானேந்திரம் (லயிட் ஞானம்) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பரமேஸ்வரன் (சிவனி)
(சகோதரன்)**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## கண்ணீர் அஞ்சலி

உதவிப்பதிவாளர் நாயக அலுவலகம் வடக்கு வலயம் எமது
அலுவலகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளராக் கடமையாற்றும்
திருமதி ராஜி சிறிராசா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் பொன்னர் மகேந்திரன்**

அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உதவிப்பதிவாளர் நாயகம் மற்றும் அலுவலக
உத்தியோகத்தர்கள் வடக்கு வலயம்**

## மரண அறிவித்தல்

### இராமசாமி சந்தாணலட்சுமி (கமலம்)




தோற்றம் 12.03.1950
மறைவு 26.02.2020

மிருசுவில் தவசிக்குளத்தை பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி சந்தாணலட்சுமி (கமலம்) அவர்கள் நேற்று (26.02.2020) புதன்கிழமை காலமானார்.
அன்னார் பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் க.இராமசாமி (ஆர்மோனிய வித்துவான்) அவர்களின் அன்பு மனைவியும் ச.கோகிலா (வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), வி.யமிலா (தயா- மானிப்பாய் சின்மயா பாரதி வித்தியாலயம்), ஞா.ரஞ்சனா (கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இ.சக்திவேல் (Halo Trust Driver), வி.விஜயகுமார் (ரட்ணம் பந்தல்), செ.ஞானதாஸ் (மருதடி விநாயகர் Tex) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நல்லையா, அன்னம்மா, காலஞ்சென்ற நடராஜா, சரஸ்வதி, பொன்னம்பலம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ச.டருணிகா, ச.கவிநயா, ச.பவதாரணன், வி.பவித்திரன், வி.மதனிசா, ஞா.யாதுர்ஷன், ஞா. கஜலக்ஷனன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன் காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்:- பிள்ளைகள், மருமக்கள்
தொடர்பு:- 077 618 4462, 077 610 3212**

## மரண அறிவித்தல்

மண்ணுலகில்
15
.
12
.
1947



விண்ணுலகில்
26
.
02
.
2020

### டேவிற் தேவதிரவியம்

[முன்னாள் ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை]

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகவும் கொண்ட டேவிற் தேவதிரவியம் நேற்று (26.02.2020) இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிற் - பாய்க்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், நீற்றா (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகஸ்தர், சாவகச்சேரி வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு கணவரும், மேரிஷாமினி (ஆசிரியர், யா/புற்றாளை மகாவித்தியாலயம்), டெய்சி ஜெயந்தினி (ஆசிரியர், கிளி/ பளை றோ.க.த.க.பாடசாலை), சுலோஜினி (தாதிய உத்தியோர்கஸ்தர்- யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் R.அன்ரனி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), M.A.றொபேட் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மாகாண திறைசேரி வடமாகாணம்), K.திலீபன் (தாதிய உத்தியோகஸ்தர்- யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் றேமிகன், லஜிகன், அன்றியா, ஷிறோன், ஷமீரா, சபோத் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தேவதயாளன், பிறேமாவதி மற்றும் தேவசகாயன் (ஓய்வுபெற்ற இ.போ.ச. உத்தியோகஸ்தர்), தேவநேசன் (ஓய்வுபெற்ற இ.போ.ச.உத்தியோகஸ்தர்) பிறேமா, பிறேமசாந்தினி (நோர்வே), பிறேமலா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.
அன்னாரின் இரங்கல் திருப்பலி புனித அன்னாள் ஆலயம், பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று (27.02.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.19/2, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:-
குடும்பத்தினர்.**

# நட்புக்குத் துரோகம்!



ஒரு காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் நண்பர்களாகப் பழகத் தீர்மானித்தன. இரண்டும் சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும், நரியும், கழுதையும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக தன் இருப்பிடத்தை விட்டு கழுதை இருக்குமிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும், அந்தப் பக்கமாக சென்ற சிங்கத்தைக் கண்டு நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது. ஒரு வழி நரிக்குப் புலப்பட்டது. அதாவது, தன் நண்பன் கழுதையைக் காட்டிக் கொடுத்து விட்டு, தான் தப்பித்துக் கொள்வது என்பது தான் அந்த வழி.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, ""மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாள்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!" என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது.

நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

""நண்பனே! இரை தேடச் செல்லலாமா?" என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், ""மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே!" என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

""நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது," என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.


இதற்குத்தான் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.

# நோபல் பரிசு பெற்றவர்களில் மிகவும் வயதானவர் இவர்



2018ம் ஆண்டுகான நோபல் பரிசுகள் தற்போது அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்தர் ஆஷ்கின் என்ற இயற்பியலாளர், தன்னுடைய 96வது வயதில் இந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார்! 1970ம் ஆண்டு இவர் வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைக்காக இப்போது நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. முதுமையின் காரணமாக இவர் நேரில் சென்று பரிசைப் பெறுவாரா என்று தெரியவில்லை. "இது என்னுடைய பழைய ஆராய்ச்சிக்கான பரிசு. இதைக் கொண்டாடும் மனநிலையில் இல்லை. இப்போது நான் வேறு புதிய ஆராய்ச்சியில் இருக்கிறேன். இந்த ஆராய்ச்சிதான் எனக்கு முக்கியம்" என்று சொல்லியிருக்கிறார்,

# இணைப்போம்




# கடற்சிங்கம்




கடற்சிங்கம் என்பது கடற்பாலூட்டி வகையைச் சேர்ந்த குடும்பம் ஆகும். இவை இரண்டு சிறிய வெளிக் காதுகள், துடுப்பு போன்ற நீண்ட நான்கு கால்கள், தடித்த மேல் தோல், அடர்த்தியான சிறிய முடிகள் மற்றும் கொழுப்பு நிறைந்த அடர்ந்த உடலும் கொண்ட ஊனுண்ணிகளாகும். துடுப்பு போன்ற கால்களால் கடற்சிங்கங்கள் கடல் நீரில் நன்கு நீந்த இயலும். கடல் மீன்கள், மெல்லுடலிகள் மற்றும் நண்டுகள் ஆகியன கடற்சிங்கத்தின் முக்கிய இரைகளாகும்.

கடற்சிங்கங்கள் வட துருவம் மற்றும் தென் துருவக் கடற்கரைகளிலும், வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலிலும் மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா, தெற்கு நியூசிலாந்து கடற்கரைகளிலும் காணப்படுகின்றன. இவற்றின் வாழ்நாள் 20-30 ஆண்டுகளாகும்.

ஆண் கடற்சிங்கத்தின் அதிகபட்ச எடை 300 கிலோ கிராமும் நீளம் 8 அடியும் ஆகும். பெண் கடற்சிங்கத்தின் அதிக பட்ச எடை 100 கிலோ கிராமும், நீளம் 6 அடியும் ஆகும். ஸ்டெல்லர் வகை கடல் சிங்கத்தின் எடை 1000 கிலோ கிராம் மற்றும் நீளம் 10 அடியாக உள்ளது.

வெளிப்புற காதுகள் கொண்ட கடற்சிங்கங்களின் குடும்பத்தில் கடல்நாய்கள் மற்றும் நீண்ட தந்தம் போன்ற இரண்டு பற்களைக் கொண்ட பனிக்கடல் யானை ஆகிய இனங்கள் அடங்கியுள்ளது. கடற்சிங்கங்கள் ஜனவரி முதல் மார்ச் முடிய உள்ள காலத்தில் கடற்கரைகளில் குட்டியிடுகின்றன. உலகில் தற்போது 1,65,000 கடற்சிங்கங்கள் இருக்கின்றன என கணக்கிட்டுள்ளனர்.

# வரைந்து பழகுவோம்




## பழமொழிகள்

- இன்பமும் துன்பமும் எடுத்த உடலுக்கு இயல்பு.
- கரணம் தப்பினால் மரணம்.
- நா அசைய நாடு அசையும்.
- உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது.
- காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்
- கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா?
- மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.
- கட்டி வைத்த பணத்தைத் தட்டிப் பறித்தார்போல.
- இறங்கு பொழுதில் மருந்து குடி.
- குரைக்கிற நாய் கடிக்காது.

விமான சேவை
யாழ்ப்பாணம் ⇆ கொழும்பு
திங்கள், புதன், சனிக்கிழமைகளில்

பதிவுகளுக்கு
கரிகணன்
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029
One way Ticket 7,500/-



# ஷரபோவா ஓய்வு

நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையாக திகழ்ந்த ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ரஷ்யாவின் நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவர் ஐந்து முறை கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.

விம்பிள்டன், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க ஓபன் பட்டத்தை தலா ஒருமுறையும், பிரெஞ்ச் ஓபனை இரண்டு முறையும் வென்றுள்ளார். 2016ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் விளையாடிய காலத்தில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியதாக தடைவிதிக்கப்பட்டது. அதன்பின் மீண்டும் விளையாட வந்தபின், தற்போது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஓய்வை அறிவித்துள்ளார்.

# மீண்டும் டோனி

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியை ஆரம்பிக்க உள்ளார்.

13ஆவது ஐ.பி.எல். திருவிழா அடுத்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகின்றது. முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டிக்கு தயாராவதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கப்டன் டோனி எதிர்வரும் 2ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆடிய பின்னர் டோனி எந்தவித சர்வதேச போட்டியிலும் ஆடவில்லை. இதனால் அவர் கிரிக்கெட் சபையின் ஒப்பந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார். ஓய்வு பெறுவாரா? அல்லது தொடர்ந்து விளையாடுவாரா? என்பதில் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் தனது ஆட்டத்திறன் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை பொறுத்தே அவர் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை குறித்து முடிவு செய்யக் கூடும்.

வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள
பலசரக்கு கடை ஒன்றுக்கு
அனுபவமுள்ள முகாமையாளர்
ஒருவர் தேவை. சம்பளம் ஒரு நாளுக்கு - 1500/=
தொடர்பு: 071 064 5447

## அவிஷ்க, குசலின் இணைப்பாட்டத்தால்

# தொடரை வென்றது இலங்கை அணி



அவிஷ்க பெர்னாண்டோ, குசல் மெண்டிஸின் சதம் மற்றும் இருவரின் இணைப்பாட்டம் கைகொடுக்க இலங்கை அணி 161 ரன்களால் அபார வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

வெஸ்ட்இன்டிஸ் அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகள், இரண்டு ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று அம்பாந்தோட்டையில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வெஸ்ட்இன்டிஸ் அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அவிஷ்க பெர்னாண்டோ, கப்டன் கருணாரத்னே களமிறங்கினர். ஆரம்பத்தில் அணி அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. கப்டன் கருணாரத்னே ஓர் ரன்னுடனும், குசல் பெரேரா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தும் ஏமாற்றமளித்தனர். பின்னர் இணைந்த குசல் மெண்டிஸ் அவிஸ்க பெர்னாண்டோவுடன் இணைந்து அணிக்கு சிறப்பானதொரு இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரது விக்கெட்டை வீழ்த்துவதற்கு வெஸ்ட் இண்டிஸ் பந்து வீச்சாளர்கள் கடும் சிரமப்பட்டனர். இருவரும் சதம் கடந்து அசத்தினர். 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த இருவரினதும் துடுப்பாட்டம் அதிகூடிய ரன்களாக பெறப்பட்ட இணைப்பாட்டமாக வரலாற்றில் பதிவாகியது. இருவருக்குமிடையிலான இணைப்பாட்டமாக 239 ரன்கள் பெறப்பட்டது. அவிஷ்க பெர்னாண்டோ 127 ரன்னும், குசல் மெண்டிஸ் 119 ரன்னும் பெற்றனர். பின்வரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்காது போக அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 345 ரன்களைக் குவித்தது. 345 ரன்கள் பெறுவதற்கு 33 பவுண்டரிகள் பெறப்பட்டது. ஆனால் ஒரு சிக்ஸர்கூட அடிக்கப்படவில்லை. ஒரு சிக்ஸர்கூட அடிக்கப்படாமல் பெறப்பட்ட அதிகூடிய ஒருநாள் ரன் எண்ணிக்கை இதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இங்கிலாந்து அணி பெற்ற 333 ரன்கள்தான் ஒரு சிக்ஸர்கூட அடிக்கப்படாமல் பெற்ற அதிகூடிய ஒருநாள் ரன்களாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் கட்ரல் 4 விக்கெட்டுக்களையும், அல்சாரி ஜோசப் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய வெஸ்ட் இன்டிஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹோப், அம்பயர்ஸ் களமிறங்கினர். இருவரும் இணைந்து சிறப்பான ஆரம்பத்தைப் கொடுத்த போதிலும் அணி 64 ரன்களைப் பெற்ற போது முதலாவது இலக்கைச் சரித்தார் மத்தியூஸ். அம்பயர்ஸ் 17 ரன்களுடன் பவிலியன் திரும்பினார். அணி 150 ரன்களை எட்டுவதற்குள் 6 விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டது. அணி சார்பில் ஹோப் பெற்ற 51 ரன்களே அதிகூடிய ரன்களாகக் காணப்பட்டது. அணித் தலைவர் பொல்லார்ட் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்திருந்தார். அணி 39.1 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 184 ரன்களையே பெற்றது.

பந்து வீச்சில் ஹசரங்க, சண்டகன் தலா 3 விக்கெட்டுக்களையும், நுவான் பிரதீப் 2 விக்கெட்டையும், மத்தியூஸ் ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# டெஸ்ட் தரவரிசையில் சிமித் மீண்டும் முதலிடம்

நியூசிலாந்துக்கு எதிரான வெலிங்டன் டெஸ்டில் சொதப்பியதால் ஐசிசி துடுப்பாட்ட தரவரிசையில் முதல் இடத்தில் இருந்து 2ஆவது இடத்துக்குச் சரிந்தார் விராட் கோக்லி.

ஐசியின் டெஸ்ட் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் முதல் இடத்தை பிடிக்க சிமித், விராட் கோக்லி இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. ஆஷஸ் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் கோக்லியை பின் தள்ளி சிமித் முதல் இடத்தை பிடித்தார்.

அதன்பின் வங்காளதேசம் அணிக்கெதிராக சதம் அடிக்க மீண்டும் விராட் கோலி முதல் இடத்தை பிடித்தார். இதற்கிடையே பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிமித் சிறப்பாக விளையாடவில்லை.

இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான வெலிங்டன் டெஸ்டில் கோக்லி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் மீண்டும் 2ஆவது இடத்துக்குச் சரிய சிமித் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

சிமித் 911 புள்ளிகளுடன் முதலிடத்திலும், விராட் கோக்லி 906 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், கேன் வில்லியம்சன் 853 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும், மார்னஸ் லபுஸ்சேன் 827 புள்ளிகளு டன் 4ஆவது இடத்திலும், பாபர் அசாம் 800, டேவிட் வோர்னர் 793 புள்ளிகளுடன் 5ஆவது மற்றும் 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.